# இறையியல் கோலங்கள்

வடிவம் 29 ஜனவரி – ஜூன் 2013 வண்ணம் 1

நம்பிக்கை ஆண்டும் நமது மறைக் கல்வியும்

நம்பிக்கை வாழ்வின் அடித்தளம் குடும்பங்களே!

விசுவாச வாழ்வுக்கு முன்னுதாரணமான மரியாள்

விசுவாச வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள்...

விழுதுகளாகட்டும் எம் விசுவசம்

விலை உயர்ந்த முத்து உங்களுக்கு உங்களுக்கு வேண்டுமா

பிற கிறிஸ்தவ சமய மக்களுடன்...

போருக்கு பின்னரான விசுவாச வாழ்வு

முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை இருபத்து மூன்றாம் அருளப்பர்

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

Vol : 29
No. : 1
January - June : 2013

வடிவம் : 29
வண்ணம் : 1
ஜனவரி – ஜூன் : 2013

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை ரி. ரவிராஜ்

நிர்வாகக்குழு: அருட்சகோ. ம.சதாஸ்கர்
அருட்சகோ.பி.ஜோண் றெக்ஷன்
அருட்சகோ. ஒ. றி. ரெறன்ஸ்
அருட்சகோ. அ. துஷ்யந்தன்
அருட்சகோ. ம. அன்ரனி பரிஸ்கரன்
அருட்சகோ. சீ. அல்பன்ராஜ்



வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.



Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. A.J. Jeyaseelan
Rev. Fr. T.Raviraj

Administrative Board: Rev. Bro.M.Sathaskar
Rev. Bro.P.John Rexon
Rev. Bro.R.O.Terance
Rev. Bro.A.Thushyanthan
Rev. Bro. M. Antony Pariskaran
Rev. Bro. S. Albanraj



Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# உள்ளே


- ஆசிரியர் உரை
- நம்பிக்கை ஆண்டும் நமது மறைக்கல்வியும்
  அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம்
- நம்பிக்கை வாழ்வின் அடித்தளம் குடும்பங்களே!
  செல்வி. எஸ். எம். வுளோறன்ஸ்
- விசுவாச வாழ்வுக்கு முன்னுதாரணமான மரியாள்
  அருட்சகோதரன் அ. யூட்கறோவ் அமதி
- விசுவாச வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள்...
  அருட்பணி. சூ.டக்ளஸ் மில்ரன் லோகு
- விழுதுகளாகட்டும் எம் விசுவாசம்
  அருட்சகோ. P. சார்லஸ் தயாளன்
- விலை உயர்ந்த முத்து...
  அருட்சகோதரி P. குளோரியா
- பிற கிறிஸ்தவ சமய மக்களுடன்...
  அருட் சகோதரன் நி.பெய்லன் குருஸ்
- போருக்கு பின்னரான விசுவாச வாழ்வு
  அருட்சகோ. இ. அன்ரனி சோசை
- முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை 23ம் அருளப்பர்
  R.O. ரெரன்ஸ்
- SYNOPSIS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் உரை

இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவு நாளான 2012 ஐப்பசி 11ம் நாளிலிரந்து 2013 கார்த்திகை 24ம் நாள்வரை உள்ள ஓர் ஆண்டு காலப்பகுதியை நம்பிக்கை ஆண்டாக ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பிரகடணம் செய்தது நாம் அனைவரும் அறிந்ததே. அகில உலக திருச்சபை தான் கொண்டிருக்கும் கிறிஸ்தவ நம்பிக்கையை பற்றி சிந்திப்பதற்கும் அதை புத்தூக்கத்தோடு மீண்டும் கண்டுகொள்வதற்கும் ஓர் உன்னதமான வாய்ப்பாக இந்த பிரகடணம் அமைந்திருக்கின்றது. இந்த நம்பிக்கை ஆண்டை அர்த்தமுள்ள முறையில் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்ற ஒரு சிறு முயற்சியாக இறையியல் கோலங்களின் 29வது இதழ் வெளியாகின்றது. கருத்துக்களை வெளியிடுவோர் சிலர் நம்பிக்கையைப் பற்றி எழுதுகின்ற போது “விசுவாசம்” என்ற பழைய சொற்பாவனையை விரும்பி பயன்படுத்தியிருப்பது பெரிதும் காணக்கிடக்கின்றது. கட்டுரைகளை படிக்கும் போது இதையும் கருத்திலே எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுநிற்கின்றேன்.

எங்கள் முன்னைநாள் பாப்பிறை முத்திப்பேறுபெற்ற 2ம் அருள் சின்னப்பர் வெளியிட்ட “கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் ஏடு வெளிவந்து இருபது ஆண்டுகள் நிறைவையும் இதனோடு சேர்த்து நினைவுகூர்ந்து கொண்டாடுகின்ற அதேவேளையில் இறைமக்கள் மேலும் அதிகமாக அதைப்படிக்கவேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இதை் செயற்படுத்துவதில் குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி கற்றிருக்கின்ற பொதுநிலையினர் தங்கள் பங்களிப்பை வழங்க முடியும் என்று கருதுகின்றேன்.

நம்பிக்கையில் ஆழம்பெறுவோம், பிறரும் அவ்வாறே நம்பிக்கையில் ஆழம்பெற எம்மால் இயன்றதை செய்வோம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவு நாளான 2012 ஐப்பசி 11ம் நாளிலிரந்து 2013 கார்த்திகை 24ம் நாள்வரை உள்ள ஓர் ஆண்டு காலப்பகுதியை நம்பிக்கை ஆண்டாக ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பிரகடணம் செய்தது நாம் அனைவரும் அறிந்ததே. அகில உலக திருச்சபை தான் கொண்டிருக்கும் கிறிஸ்தவ நம்பிக்கையை பற்றி சிந்திப்பதற்கும் அதை புத்தூக்கத்தோடு மீண்டும் கண்டுகொள்வதற்கும் ஓர் உன்னதமான வாய்ப்பாக இந்த பிரகடணம் அமைந்திருக்கின்றது. இந்த நம்பிக்கை ஆண்டை அர்த்தமுள்ள முறையில் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்ற ஒரு சிறு முயற்சியாக இறையியல் கோலங்களின் 29வது இதழ் வெளியாகின்றது. கருத்துக்களை வெளியிடுவோர் சிலர் நம்பிக்கையைப் பற்றி எழுதுகின்ற போது “விசுவாசம்” என்ற பழைய சொற்பாவனையை விரும்பி பயன்படுத்தியிருப்பது பெரிதும் காணக்கிடக்கின்றது. கட்டுரைகளை படிக்கும் போது இதையும் கருத்திலே எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுநிற்கின்றேன்.

எங்கள் முன்னைநாள் பாப்பிறை முத்திப்பேறுபெற்ற 2ம் அருள் சின்னப்பர் வெளியிட்ட “கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் ஏடு வெளிவந்து இருபது ஆண்டுகள் நிறைவையும் இதனோடு சேர்த்து நினைவுகூர்ந்து கொண்டாடுகின்ற அதேவேளையில் இறைமக்கள் மேலும் அதிகமாக அதைப்படிக்க வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இதை் செயற்படுத்துவதில் குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி கற்றிருக்கின்ற பொது நிலையினர் தங்கள் பங்களிப்பை வழங்க முடியும் என்று கருதுகின்றேன்.

நம்பிக்கையில் ஆழம்பெறுவோம், பிறரும் அவ்வாறே நம்பிக்கையில் ஆழம்பெற எம்மால் இயன்றதை செய்வோம்.

Fr. M.A.P.R. Savundranayagam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஆண்டும் நமது மறைக் கல்வியும்

## (ஒரு பன்முகப் பார்வை)

அருட்பணி. மா.றேஜிஸ் இராசநாயகம்

அறிமுகம்

நம்பிக்கை ஆண்டு நம்மையே மறு ஆய்வு செய்ய அழைக்கும் காலம். அக்டோபர் 11, 2012 லிருந்து நவம்பர் 24, 2013 வரையுள்ள காலகட்டத்தை "நம்பிக்கை ஆண்டாகக்" கொண்டாட திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இதை அறிவித்த திருத்தந்தை, "நம்பிக்கை ஆண்டு ஒட்டு மொத்த திருச்சபையின் நற்செய்திப் பணிக்குப் புதுப்பிக்கும் ஆற்றல் தருகின்றது. ஆண்களும், பெண்களும் தாங்கள் வாழ்ந்து வரும் பாலைநில அனுபவத்திலிருந்து விடுதலைக்கு வழிநடத்தப்படும் அனுபத்தைப் பெறுகின் றனர். இதன் மூலம் வாழ்வின் இடத்திற்கு நடத்திச் செல்லப்படுவர். அதாவது வாழ்வில் நிறைவு தரும் இயேசுவோடு நட்புறவு பெறுவர்" என்று கூறியுள்ளார்.

திருத்தந்தை தன்னுடைய மறையுரையில் "நம்பிக்கை ஆண்டு"

1. அருளின் காலமாகவும் அர்ப்பணத்தின் காலமாகவும்,
2. கடவுளிடம் முழு மனதுடன் திரும்பி வந்து அவரில் கொண்டுள்ள நம்பிக்கையை ஆழப்படுத்தும் காலமாகவும்,
3. மிகுந்த மகிழ்ச்சியுடன் இறைவனின் மீட்புத் திட்டத்தை அறிக்கையிட்டு புத்துலகம் படைக்கும் காலமாகவும் அமைந்துள்ளது என்று தெளிவுப்படுத்தியுள்ளார்.

1992ல் வெளியிடப்பட்ட 'கத்தோலிக்க மறைக்கல்விக் கையேடு' இந்த நம்பிக்கைப் பயிற்சிக்கு சிறந்த வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். நம்பிக்கை ஆண்டும் நமது மறைக்கல்வியும் நமது கிறிஸ்தவ வாழ்வை ஆழப்படுத்தும் நோக்குடையன; பண்புடையன. இவை இரண்டும் சமபாதையில் செல்லும் போதுதான் கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமும் பயனும் உள்ளதாயிருக்கும்.

1. நம்பிக்கை ஆண்டின் சின்னம்.

கப்பல் திருச்சபையை குறிக்கின்றது. கப்பலானது புயற் காற்றின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாய் மரத்தின் அசையா உதவியோடு நீரில் மூழ்காமல் செல்கின்றது. இந்தப்பாய் மரம்தான் சிலுவையாகவும் பாய்விரிப்பு கிறிஸ்துவாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆகவே திருச்சபையாகிய கப்பலை கிறிஸ்து உறுதியான பாய்விரிப்பாக எந்தப்புயல் வந்திடினும் மூழ்காமல் காத்துச் செல்வார். பாய் விரிப்பின் பின்புலத்தில் மூவெழுத்து வடிவுடன் இணைந்திருப்பது சூரியன். இது நற்கருணையை சுட்டி நிற்கின்றது. ஆகவே அவரது நம்பிக்கையை நாமும் கொண்டு இயேசுவோடு பயணித்து நம்பிக்கை அற்றவர்களாக இராமல் நம்பிக்கை உள்வர்களாக நித்தியத்திற்கும் வாழ எம்மை இட்டுச் செல்லவே இந்த ஆண்டை நம்பிக்கை ஆண்டாக திருச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

வத்திக்கான் 2ம் சங்கத்தின் பொன்விழா ஆண்டாகவும் கத்தோலிக்க மறைக்கல்வி தொகுப்பேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்ட 20ம் ஆண்டாகவும் உள்ள பொன்னான நேரத்தில் இவ் ஆக்கத்தை வரைவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**2. நம்பிக்கை ஆண்டு விடுக்கும் அழைப்பு.**

புலர்ந்துள்ள "நம்பிக்கை ஆண்டு" ஆண்டவரின் அருள் தரும் ஆண்டாக மலர்கின்றது. நமது நம்பிக்கையின் வழியாக நாம் இயேசுவையே தொடுகிறோம் என்பது ஒரு மகா அனுபவம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் நமது நம்பிக்கையில் இயேசுவையே தொடும் அனுபவத்தில் திழைத்து நிற்கின்றோம். இந்த அனுபவத்தில் அன்றாடம் நாம் வாழ, வளர என்ன வழி என்று சிந்திக்கும் போதுதான் நம்பிக்கையின் வழியானது மறைக்கல்வியின் வழியில் பயிற்சியும் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெறும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

வத்திக்கான் 2ம் சங்கத்தின் பொன்விழாவும் கத்தோலிக்க மறைக்கல்வித் தொகுப்பேடு வெளியிடப்பட்ட 20ம் ஆண்டும் இணைந்து வரும் இவ்வேளையில் அருளாளர் 2ம் யோண் போல் கூறுவது போல, இவை இரண்டுமே மேன்மையானவை. இவற்றை சரியாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்; நமது இதயத்தில் இருத்த வேண்டும். திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு இவற்றின் சரியான விளக்கங்களை தெரிந்து கொள்வது அடிப்படையாக அமையும்.

**3. மறைக்கல்வி என்பது என்ன?**

மறைக்கல்வி ஒருவரின் நம்பிக்கை, உறவு, வாழ்வு, வழிபாடு, இலட்சியம், எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிய தெளிவை கற்றுத்தருகின்றது. வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளை அது கற்றுத்தரவேண்டும். முழு ஆளுமைப் பண்பை வளர்த்து உறவிலும் அன்றாட வாழ்விலும் முழுமனிதனாக வாழக் கற்றுத்தர வேண்டும். கசடறக் கற்றுத் தரும் கல்வி "கசடுகளின் கூடமாக" மாறிவிடாமல், அதை மனித வாழ்வுக்கும், நம்பிக்கை வாழ்வுக் கும், இலட்சிய சமூக - பொருளாதார - அரசியல் - சமய - கலாச்சார நிலைகளில் எம் கண்களையும் திறந்து மனிதம் பற்றிய விழிப்புணர் வைக் கொடுத்து மனிதத்திற்கான எம் இதயத்தீயைப் பற்றியெரியச் செய்யும். மறைக்கல்வி என்பது "சீடத்துவம்" நோக்கிய பயணம் என்பதை எம்மாவுஸ் சீடரின் நிகழ்வில் (லூக் 24:13-35) காண்கிறோம். இது கிறிஸ்துவின் சீடத்துவம் நோக்கிய ஒரு தேடலாகும்.

**4. இறைவார்த்தையில் ஊன்றிய மறைக்கல்வி.**

எல்லா வகையான மறைக்கல்விக்கும் எல்லாருக்குமான மறைக்கல்விக்கும் ஊற்றாக இருப்பது இறைவார்த்தையே. எனவே இதுவரை வந்த மறைக்கல்வி எந்த அளவுக்கு இறைவார்த்தையில் ஊன்றியுள்ளது என்பதையும் எந்தளவு அமைந்திருக்க வேண்டும் என்பதையும் அறிவது சாலச்சிறந்தது. கத்தோலிக்க திருச்சபையின் உயிர்நாடியாக இருப்பது மறைக்கல்வியாகும். இத்தகைய மறைக்கல்வி திருச்சபையின் ஊற்றாகிய இறைவார்த்தையில் ஊன்றியிருப்பது அவசியமாகின்றது. மறைக்கல்வி என்பது அறிவித்தல், அறிவுறுத்தல், விளக்கமாக கற்றுக் கொடுத்தல் என்று பொருள்படும். கத்தோலிக்க மறைக்கல்வி இறைவார்த்தையில் ஊன்றி அமைந் துள்ளது என்பதை புனித அகுஸ்தீனார், புனித தோமஸ் அக்குயினாஸ், புனித பிரான்சிஸ்கு அசிசியார், புனித அந்தோனியார், புனித சாமிநாதர் என்பவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**மறைக்கல்வி இறைவார்த்தையில் ஊன்றியதாக அமையவேண்டும் என்பதற்கு காரணங்கள் பல. அவற்றுள் சில :**

1. விவிலியம் இறைவெளிப்பாட்டை கிறிஸ்துவில் நிறைவு பெறுவதாகக் கூறி (எபி 1:1-4) கடவுள் தொடர்ந்து வெளிப்படுத்துகின்றார் என்ற நம்பிக்கையைப் பெறத்தூண்டுகிறது. திருவழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் தம் மக்களுடன் பேசுகின்றார்.

2. விவிலியம் மீட்பின் வரலாற்றைக்கூறும் நூல். அதாவது இறைவன் எப்பொழுதும் வரலாற்றில் ஈடுபட்டு நமக்கு விடுதலை தருகின்றார் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.
3. விவிலியம் இறைமக்கள் நம்பிக்கையின் வரலாறு.
4. விவிலியம் என்பது மனித வார்த்தையில் கடவுள் வார்த்தை (எபி 12:14)
5. விவிலியம் திருச்சபையின் அனைத்து இறையியல் மற்றும் ஆன்மீகத்தின் பெட்டகம்.
6. விவிலியம் நம்மை வழிநடத்தி அறிநெறி வாழ்வுக்கு வழி நடத்தும் அறநெறி நூல்.

இவ்வாறு அனைத்திற்கும் ஊற்றாகத் திகழும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கும் மறைக்கல்வி எல்லோரையும் ஒருங்கிணைத்து வழிநடத்தி எம்மாவுஸ் சீடர்களின் கண்களைத் திறந்து உள்ளங்களை பற்றியெரியச் செய்தது போல இன்றைய எமது சமூக - பொருளாதார - அரசியல் - சமய - கலாச்சார நிலைகளில் எம் கண்களையும் திறந்து மனிதம் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்து மனிதத்திற்கான எம் இதயத்தீயைப் பற்றியெரியச் செய்யும். மறைக்கல்வி என்பது ''சீடத்துவம்'' நோக்கிய பயணம் என்பதை எம்மாவுஸ் சீடரின் நிகழ்வில் (லூக் 24:13-35) காண்கிறோம். இது கிறிஸ்துவின் சீடத்துவம் நோக்கிய ஒரு தேடலாகும்.

### 5. மறைக்கல்வியின் அவசியம்.

மறைக்கல்வி என்பது நம் சமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் அறிவுபூர்வமாக நாம் கற்றுக்கொள்ளும் ஒரு படிப்பு மட்டுமல்ல. நமது வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்திலும், நிகழ்விலும் சிறப்பாகக் காலத்தின் அறிகுறிகளிலும் கடவுள் நம்மைச் சந்திக்கின்றார். அவருடைய அன்பு மக்களுக்குரிய உறவோடும் உரிமையோடும் மாண்போடும் மகிழ்வோடும் நாம் வாழவும் வளரவும் நமக்கு அழைப்பையும் அருளையும் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றார். இந்த இறைய னுபவத்தை நாம் இனம் கண்டு வாழ்க்கை அனுபவமாக மாற்றி, இறையாட்சியின் மனிதர்களாகவும் குழுமங்களாவும் நாம் உருவாகி, உலக சமூகத்தையே அன்பிலும் நீதியிலும் செயற்படும் இறையாட்சியாக உருமாற்ற வேண்டும். இத்தகைய நம்பிக்கையின் புரிதலையும் உறுதிப்பாட்டையும் மறைக்கல்வி நமக்குத் தர வேண்டும். இத்த கைய மறைக்கல்வி பிறப்பு முதல் இறப்பு வரை தொடர வேண்டிய ஒரு முயற்சியும் பயிற்சியு மாகும். இது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று நமது நம்பிக்கை வாழ்வில் வளர்ச் சியையும் முதிர்ச்சியையும அளிக்கவேண்டும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவோடு உள்ள உறவில் வளரவும் நம்பிக்கையின் சாட்சிகளாகத் திகழவும் அது வகை செய்ய வேண்டும்; வழிவகுக்க வேண்டும்.

### 6. மறைக்கல்வியின் மாபெரும் மாற்றம்.

வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் மறைக்கல்வியின் தோற்றத்திலும் பொருளிலும் மாபெரும் மாற்றத்தைக் காணலாம். மறைக்கல்வி என்பது வாழ்வு முழுவதும் தொடர்ந்து நடைபெறும் ஒரு பயிற்சியாகும். இது பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் ஒரு வாழ்க்கைப் பயண நிறைவாகும். இது தினந்தோறும் குட்டித்திருச்சபையாகிய குடும்பத் திருச்சபையால் வாழ்ந்து காட்டப்பட வேண்டும். மறைக்கல்வி கிறிஸ்தவ வாழ்வை முழுவதுமாக வாழ்ந்து காட்ட அழைக்கின்றது. இதனை பின்வரும் காரணிகள் உறுதி செய்கின்றன.

1. திருச்சபை தனது பொறுப்பான நிரந்தர மறைக்கல்வியை பெற்றோர்கள், பெரியோர்கள் வழியாக மட்டுமே செய்து, தனது கடமையை நிறைவேற்ற முடியும்.
2. முதிர்நிலையினர் இளையோரின் உலகை நிர்மாணிப்பதால் ஒரு முன் உதாரணமாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகிறார்கள்.

3. முதிர்நிலையினரும் தங்களுடைய நம்பிக்கை வாழ்வில் தொடர்ந்து வளரவும், புதுப்பிக்கவும், மாற்றம் காணவும் வேண்டி இருப்பதால் இத்தகைய தொடர் பயிற்சி தேவைப்படுகிறது.
4. பிள்ளைகளின் நம்பிக்கை வாழ்வில் பெற்றோரின் பங்கேற்பு அளவிடமுடியாதது, எனவே இத்தகைய பெற்றோரை பயிற்றுவிப்பது காலத்தின் கட்டாயம்.

**7. நம்பிக்கை வழி ... மறைக்கல்வியின் வழி ...**

நம்பிக்கை ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கையை இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள வாய்ப்பாக உள்ளது. கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையே வாழ்விற்குப் புதிய விடியலையும், நம்பிக்கையையும் தரும் புதிய அனுபவமாக, உயிர்த்த ஆண்டவரின் அனுபவமாக அமைகின்றது. இந்த இறை அனுபவத்தின் நம்பிக்கை புனித பரிமாணத்தைச் சுட்டி நிற்கின்றது. இன்றும் நம்பிக்கை என்பது மீண்டும் மீண்டும் தேடிக் கண்டு பிடித்து அனுபவிக்கும் அனுபவமாக உள்ளது. தேடல் உள்ள உயிருக்குத்தான் பசியெடுக்கும், தேடல் உள்ள இடத்தில் தான் மன உறுதி கிடைக்கும். மன உறுதியுள்ள இடத்தில்தான் அர்ப்பணம் மலரும், இன்று கிறிஸ்தவம் வேண்டி நிற்பது உயிரூட்டம் நிறைந்த அர்ப்பண வாழ்வை இத்தகைய அர்ப்பணத்திற்கு நம்பிக்கை வழி ஏற்படுகின்ற மறைக்கல்வியே வழிவகுக்கும்.

**8. மறைக்கல்வியின் செயல்கள்.**

மறைக்கல்வி பின்வரும் செயல்களைப் பரிந்துரைக்கின்றது.

1. உண்மையின் புரிதலை ஆழப்படுத்துவதே மறைக்கல்வி. இதையே மறைப்போதகம் என்கிறோம். மறைப்போதகமே முதல் செயல்.
2. மறைக்கல்வியானது அர்த்தமுள்ள வழிபாட்டிற்கு இட்டுச் செல்லும் வழிபாட்டுக் கல்வியாகத் தரப்பட வேண்டும்.
3. மறைக்கல்வியானது ஆண்டவர் இயேசுவிடம் திரும்பிச் செல்லும் மனமாற்றத்தின் வழிகளைத் தரும் அறநெறிப் பயிற்சியையும் தரவேண்டும்.
4. மறைக்கல்வி இறைவேண்டல் செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும்.
5. மறைக்கல்வி சமூக அக்கறையை வளர்க்க வேண்டும்.
6. மறைக்கல்வி நம்பிக்கையின் சிறுகுழுமங்களைக் (அன்பியங்களை) கட்டி எழுப்ப வேண்டும்.
7. மறைக்கல்வி நமது பல்சமய சூழமைவில் வாழவும், சாட்சியம் பகரவும் உதவ வேண்டும்.
8. அனைத்திற்கும் மேலாக மறைக்கல்வி இயேசுவின் வழியில் வாழ மனமாற்றத்தைத் தந்து வழி நடத்தவேண்டும்.

**9. அருளடையாள மறைக்கல்வியில் அருட்பணியாளர்களின் பங்கு.**

கடவுள் மனித வாழ்வுக்கு வேண்டிய தமது அருள் வெள்ளத்தை இணையாகத் தேக்கி திருச் சபையிடம் அளித்துள்ளார். அதற்கான வழிமுறைகளைத் தந்துள்ளார். மக்களுக்கு அவற்றை வழங்கிட அருட்பணியாளர்களை ஏற்படுத்தித் தந்துள்ளார். அவர்கள் அருள் வெள்ளத்தின் வாய்க்கால்களைத் திறந்துவிட, தம் பங்கு மக்களை நிலைவாழ்வுக்கு வழிநடத்த, இயேசு 7 அருட்சாதனங்களையும் அமைத்துத் தந்துள்ளார். தக்க சமயத்தில் தகுந்தவிதமாக அருட் பணியாளர்கள் செயற்பட, மேற் கூறியதுபோல மன உறுதிப்பாட்டோடு முழுமையான அர்ப் பணிப்போடு செயற்பட அருட்பணி யாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு அருட்சா தனங்களை தங்கள் பங்குத்தளங்களிலே தகுந்த ஆயத்தத்தோடு வழங்கும்போதுதான் இறை மக்களை வாழ வைக்க முடியும் வழிநடத்த முடியும்; அருட்சாதனங்கள் அர்த்தமுள்ளவை யாகும்; அவற்றின்பால் இறைமக்களுக்கு ஆர்வமும் ஈர்ப்பும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# நம்பிக்கை வாழ்வின் அடித்தளம் குடும்பங்களே!

ஆக்கம். செல்வி. S.M. வுளோறன்ஸ்

## முன்னுரை

2012 ஒக்டோபர் 11ம் திகதி முதல் 2013 நவம்பர் 24ம் திகதி வரையும் எமது பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையில் 'நம்பிக்கையின் ஆண்டாக'' திருத்தந்தையால் அறிவிக்கப் பட்டுள்ளது என்பது நாம் அறிந்த சிறப்பான விடயம். எமது இலங்கை திருச்சபை உள்ளடங்களாக பெரும்பாலான ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் கத்தோலிக்க நம்பிக்கை தனது இறப்பை அண்மித்துக்கொண்டிருக்கும் வேளையில் எஞ்சியிருக்கும் அற்ப சொற்ப நம்பிக்கையை உறுதிப்படுத்த திருச்சபைத் தலைவர்கள் முதல் பொதுநிலையினர் வரை பகீரதப்பிரயத்தனம் செய்கின்றனர்.

இற்றைக்கு 50வருடங்களுக்கு முன்பு அதாவது 1962 - 1965வரை இடம்பெற்ற 2ம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளை ஆழமாக்கவும், 20 வருடங்களுக்கு முன்பு 1992ல் பிரஞ்சு மொழியில் வெளிவந்த கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏட்டின் படிப்பினைகளை (CCC) விரிவாகக் கற்கவும் முயற்சி எடுக்குமாறு திருத்தந்தையால் கேட்கப் பட்டுள்ளோம். நாம் யாழ் மறைமாவட்ட திருச்சபையாக, பங்குத் திருச்சபையாக, ஆலயத் திருச்சபையாக, குடும்பத் திருச்சபையாக நம்பிக்கை வாழ்வை வாழ்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். எல்லாவற்றிலும் மேலாக எம் குடும்பங்களின் நம்பிக்கை வாழ்வை பலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகவுள்ளது.

## 1. குடும்பத்தில் நம்பிக்கை வாழ்வு

அனைத்து உலக திருச்சபைக்கும், நாடு, மறைமாவட்டம், பங்கு, ஆலயம் என்றும் அதன் கூறுகளுக்கும் அடித்தளமாக உள்ளது; சமூகத்தின் அச்சாணியாகிய குடும்பம் என்னும் பலிப் பீடத்தில் வாழப்படும் நம்பிக்கை வாழ்வேயாகும். குடும்பம் இல்லை என்றால் திருச்சபை இல்லை. குடும்ப அங்கத்தவர்களாகிய பொதுநிலையினரின் நம்பிக்கை வாழ்வே அனைத்துலகக் கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கை வாழ்வாக மலர்கின்றது. குடும்பத்தில் நம்பிக்கை என்னும் ஆணிவேர் ஆழப்பதியுமிடத்துதான் திருச்சபை என்னும் பெருவிருட்சமும் ஆட்டம் காணாது நிலைத்து நிற்கும் என்பது காலம் கண்ட உண்மை.

## 2. குடும்பத்தில் பலி வாழ்வு

குடும்பம் ஓர் பலிக்களம். தந்தை, தாய், பிள்ளைகள் ஒருவர் மற்றவருக்காகத் தம்மை அர்ப்பணமாக்கும் தியாகத்தின் பீடமே குடும்பம். ஒவ்வொரு உள்ளமும், உடலும், ஆன்மாவும் தூய ஆவியின் ஆலயமாகும் (1கொரி 3:16) நாளாந்தத் திருப்பலியில் தகுதியுடன் நற்கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உட்கொள்ளுதல் நம்பிக்கை கொண்டோரின் தியாக வாழ்விற்கு உரமூட்டுகின்றது. ஞாயிறு கடன் திருநாளிலாவது முழுக்குடும்பமாக இணைந்து திருப்பலியில் முழுமையாகப் பங்கேற்பது அவர்களது கடமையாகும். இதன் மூலம் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது. தனது ஏக மகன் இயேசுவுடன் குடும்பத்தவர்களது பலிவாழ்வை ஏற்கும் தந்தையாகிய இறைவன் தனது மகனையே வாழ்வுக்கு உரமூட்டும் உணவாகத்தந்து பயணம் செய்யும் வாழ்வில் பங்கேற்கும் தீமைகளை எதிர்த்துப் போராடப் பலம் தருகின்றார். அதன் மூலம் நம்பிக்கை வாழ்வை ஆழமாக்கி, எத்தகைய சவால்களையும் முறியடித்து, இறைவன் ஒருவரிலேயே எம் வாழ்வை உறுதிசெய்யத் திடமளிக்கின்றார். எனவே திருப்பலி குடும்ப வாழ்வைப் புனிதப்படுத்தி மகிழ்ச்சிகரமாக்குவதற்கு இன்றியமையாததாக விளங்குகின்றது.

### 3. குடும்பத்தில் அருட்சாதன வாழ்வு

நம்பிக்கை என்னும் கொடை முதல் முதல் வழங்கப்படுவது திருமுழுக்கு அருட்சாதனத்தில் ஆகும். எனவே குடும்பத்தில் மறையறிவு பற்றிய அகில இலங்கை மகாநாடு 1970 டிசம்பர் 15ஆம் 16ஆம் திகதிகளில் யாழ் மறைமாவட்டத்தில் இடம் பெற்றபோது அவ்மகாநாட்டு மலருக்கு அவ்வேளை திருமலை - மட்டுநகர் துணை ஆயராக இருந்த மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை வழங்கிய கட்டுரையில் 'குழந்தைகளின் திருமுழுக்கின்போது பெற்றோரும், ஞானப்பெற்றோரும் சமூகம் தரவேண்டுமென்று வலியுறுத்தினார். அதாவது நம்பிக்கை வாழ்வு பற்றிய ஆழமான மறையறிவை அவ்வேளையில் அளிக்கப்படும் வாக்குறுதியின் ஊடாக அவர்கள் பெற்றுக்கொண்டு, தமது நம்பிக்கையை ஆழமாக்கி குழந்தைகளும் தமது வாழ்க்கை காலத்தில் கடைப்பிடித்து வளர்க்க வழிப்படுத்த முடியும் என வலியுறுத்தியிருந்தார்.

பிள்ளைகள் வளரும் பருவத்தில் இறைவனோடும் பிறரோடும் ஏற்படும் உறவு முறிவு களுக்குக் காரணமாக அமையும் பாவச் செயல்களுக்கான பரிகார நிலையை ஒப்புரவு அருட் சாதனத்தின் மூலம் பெற்று அனைவரோடும் அன்புறவில் வாழவேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும். அத்துடன் ஒப்புரவு அருட்சாதனத்தின் பெறுமதியை பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதோடு அவர்களை மாதம் ஒருமுறை பங்குக் குருவிடம் கூட்டி வந்து தாமும் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று தொடர்ந்தும் தம் வாழ்வில் கடைப்பிடிக்க பயிற்சி அளிக்க வேண்டும். இந்நிலையை ஞானப் பெற்றோரும் தம் ஞானக்குழந்தைகளுக்கு வலியுறுத்துவது மிக மிக அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஏனெனில் எமது குடும்பத்தின் குறை நிறை, சுக துக்கங்களில் பங்குபற்றும் பங்குத் தந்தையிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது எமது குடும்ப வாழ்வின் அன்புறவு நிலைக்குச் சிறந்த வழிகாட்டுதலாக அமையும். எடுத்துக்காட்டாக நற்செய்தியில் யேசு சமாரியப் பெண்ணை பாவ அறிக்கை செய்ய வைத்து தூய ஆவியை வழங்கி பணிக்கு அனுப்புகின்றார். (யோவா 4:1-42) ஊதாரி மைந்தன் போன்று வாயினால் யேசுவின் பிரதிநிதியான குருவிடம் பாவ அறிக்கை செய்து ஒப்புரவாகுதலை புதுப்பிக்கும்படி எடுத்துக்காட்டும் முறையும் (லூக்:15:11-32) சக்கேயுவை போன்று பாவங்களுக்கான பரிகார நிலையை பகிரங்கமாக எடுத்துக்காட்டுவதையும் (லூக்.19:1-10) பாவிப் பெண்ணின் கண்ணீர் அவளது மனக்குமுறல் களையும், பாவத்தின் கனாகனத்தினால் உண்டாகும் வேதனையும் அதற்கான முழுமையான வழி இயேசு ஒருவரே என்பதையும் (லூக். 7:36-50) எடுத்துக் காட்டுவதுடன் 'உமது நம்பிக்கை உம்மை மீட்டது; அமைதியுடன் செல்க' என்ற இயேசுவின் வழிப்படுத்தலை இன்றும் நாம் அவரது பிரதிநிதியாகிய குருவிடமிருந்தே பெறமுடியும் என்பதையும் பெற்றோர், ஞானப் பெற்றோர் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பாளிகளாக உள்ளனர். நம்பிக்கை வாழ்வின் ஊற்று நல்ல பாவ அறிக்கையிலேயே தங்கியுள்ளது.

எமது தெய்வீக ஆன்ம உணவாக விளங்கும் தேவநற்கருணையில் அப்பரசக் குணங்களுக் குள் இயேசு உயிரோடு இருக்கின்றார் என்பதை சிறியவயதிலிருந்தே ஊட்டி வளர்க்க வேண்டி யது பெற்றோரின் மற்றுமொரு கடைப்பாடாக மிளிர்கின்றது. நிலாச்சோறு ஊட்டும்போது தமது குழந்தையின் பிஞ்சுக்கரத்தைப் பிடித்து சிலுவை அடையாளம் நெற்றியிலிருந்து நெஞ்சுவரை வரைந்து பழக்கும் ஒரு தாய், ஆலயத்திற்குள் கூட்டிச்சென்று தன்னுடன் வைத்திருந்து நற்கரு ணைப் பேழையைச் சுட்டிக்காட்டி அதன் உட் பொருளை விளங்கப்படுத்தி தலைவணங்கி, கைகுவித்து செபம் செய்து ஆராதிக்கப் பயிற்ற வேண்டும். அதனூடாக படிப்படியாக உயிரோடு பேசும் நற்கருணை ஆண்டவரின் குரலைக் கேட்கப் பழக்குவதாக இருந்தால், இறக்கும் வரை அக்குழந்தை எத்தகைய விசுவாசத் தளர்வுமின்றி புனிதத்தில் வளரும். ஆகவே இத்தகைய செயற்பாட்டுடன் கூடிய நம்பிக்கை வாழ்விற்கு முதல் வாயிலாக விளங்குபவர்கள் குடும்பத்தில் வாழும் பெற்றோர்களே!

முன் இளமைப்பருவத்தில் வழங்கப்பட வேண்டிய உறுதிப்படுத்தல் என்னும் அருட்சாதனத் தைப் பெறுவதன் ஊடாக ஒவ்வொரு பிள்ளையும் திருச்சபையின் வளர்ந்த அங்கத்தவர்களா கவும், தீமைகளை எதிர்த்துப் போராடும் இயேசுவின் போர்வீரர்களாகவும், வீராங்கனைகளா கவும் மாறுகின்றனர். இவ் அருட்சாதனம் திருமுழுக்கில் பெற்ற தூய ஆவியை ஒவ்வொருவரி லும் தூண்டி எழுப்புகின்றது. தூய ஆவியானவரின் கொடைகள், கனிகளை அபரிதமாகப் பெற்று தான் தூய ஆவியின் ஆலயம் என்பதை உணர்ந்து வாழும் அளவிற்கு தனது நம்பிக் கையைச் செயற்பாடுடையதாக மாற்றி சாட்சியம் பகர அழைக்கும் அருட்சாதனமாகவும் இது விளங்குகின்றது. பொறுப்புணர்வுள்ள வாழ்விற்கு குடும்ப அங்கத்தினர் அனைவரும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும், ஊக்கமூட்டு பவர்களாகவும் வாழ வேண்டும்.

பொதுக் குருத்துவ வாழ்விற்கு அழைக்கப்பட்ட 'பொதுக் குருக்கள்' திருச்சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாத அங்கத்தவர்கள் உப்பாகக் கரைந்து ஒளியாகத் துலங்கி தன்னை மாசுபடுத்தாது, வேறோர் திரிக்கு ஒளிகொடுத்து அவர்கள் வாழ்வினை ஒளிர்விக்கவும், புளிக்காரமாக மறைந்திருந்து புளிப்பேற்றி நற்செய்தி வாழ்விற்குள் ஏனையவர்களையும் இணைக்கும் பணியைச் செய்கின்றனர். இவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, வேறாக்கப் பட்டு இறைவனுக்கும் மனிதர்களுக்கும் இடைநிலையாளர்களாகப் பணிக் குருக்கள் ஏற்படுத்தப்படுகின்றனர்.

பணிக்குருத்துவம், மற்றும் துறவறம் என்பவற்றின் மகிழ்ச்சியான வாழ்வு பற்றி எடுத்துக் கூறிப் பிள்ளைகளில் அழைத்தலின் விதையை விதைக்க வேண்டியவர்கள் பெற்றோர்களே.

குடும்பம் என்னும் குட்டித் திருச்சபையிலிருந்து குருத்துவ வாழ்வின் ஊடாக கிறிஸ்துவின் முப்பணிகளுக்காக குருகுலத்தினர் அழைக்கப்படுகின்றனர். "கிறிஸ்துவின் அர்ச்சிக்கும் பணியையும் நிறைவேற்றும் . ஏனெனில் உமது கையில்தான் கிறிஸ்துவின் திருப்பலி இரத்த மின்றி திருச்சடங்குகளின் வழியாகப் பீடத்தின் மீது ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியோடு விசுவாசிகளின் ஆன்ம பலிகளையும் இணைத்து இவை நிறைவு பெறச் செய்வதும் உம் பணியே. ஆகவே நீர் செய்வதன் உட்பொருளை உணர்ந்து கொள்ளும் நிகழ்த்தும் பலிக்கேற்ற படி வாழ்க்கை நடத்தும். அப்பலியில் ஆண்டவருடைய திருமரணம், உயிர்த்தெழுதல் என்ற மறைபொருள் நிகழ்ச்சிகளை நீர் கொண்டாடுவதால் உமது உடலை ஒறுத்துப் புத்துயிர் பெற்றவராய் வாழக் கருத்தாயிரும்." மேற்கூறப்பட்ட குருத்துவ அபிஷேகத்தில் ஆயர்கூறும் அறிவுரைக்கேற்ப வாழ்க்கை நடத்துவது ஒவ்வொரு குருவின் தலையான கடமையாகும். இதற்குத் துணையாக குடும்பங்களில் தமது பிள்ளைகள் மத்தியில் குடும்ப செபத்தில் ஈடுபடும்போது குருக்களுக்காகச் செபிப்பது மட்டுமல்லாது, தமது சொந்தப் பிள்ளைகளாகிய குருக்கள், துறவிகள் உலக லௌகீக வாழ்விற்கும், தூய்மையற்ற நிலைகளுக்கும் தம்மை அடிமையாக்காது செபத்தில் நிலைத்து தூய வாழ்வு வாழ அவர்களுக்காகச் செபிப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமையும், உலகியல் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப் பத்தில் அவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்கி வழிநடத்துவது பெற்றோர்களின் பொறுப்புமாகும். "நீர் ஓர் சாவானபாவம் செய்வதை விட செத்து என்னுடைய காலடியில் கிடப்பது மேல், அரியணை வெறுமையாக இருக்கட்டும்." என்று 9ஆம் லூயிஸ் அரசனின் தாயின் கூற்று ஒவ்வொரு குரு, துறவியான மகனுக்கும், மகளுக்கும் பெற்றோரால் கூறப்பட வேண்டும். ஏனெனில் அரசனாலும், குருவானாலும் அவர்கள் பெற்றோருக்குப் பிள்ளை தானே!

கத்தோலிக்க குடும்ப வாழ்விற்கு அடித்தளமாக விளங்குவது திருமணம் என்னும் அருட்சாத னமே! இவ் அருட்சாதனத்தைப் பெற இருப்பவர்கள் தகுந்த மறையறிவால் தம் வாழ்வை ஆயத்தம் செய்ய முன்வரவேண்டும். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யாமல் திருமண வாழ்விற் குள் அடியெடுத்து வைப்பது அழுக்கு ஆடையுடன் சாப்பாட்டு மேசையில் அமர்வதற்குச் சமம். வார்த்தைப் பாட்டின் மூலம் திருமண ஒப்பந்தம் செய்த பின்பு ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசும்போதும், திருமண ஆயத்தங்களைச் செய்யும் வேளையிலும் அடிக்கடி எதிர்காலத்தை இறைவனிடம் ஒப்படைத்து இருவரும் சேர்ந்து செபிப்பது அவசியம். ஏனெனில் ஊனியல்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சைகளை மேற்கொண்டு சாத்தானின் உறைவிடமாக குடும்ப வாழ்வு மாறாமல் இருக்க செபம் அவசியம்.

கத்தோலிக்கர் திருமணம் என்னும் அருட்சாதனத்தை ஆலயத்தில் திருப்பலிக்குள் நிறை வேற்றி மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டும். வேறுமதத்தினருடன் திருமணம் செய்யும் நிலை ஏற்பட்டால் அதற்காகத் திருச்சபை வகுத்துள்ள ஒழுங்குமுறையை பெற்றோர்கள் பிள்ளை களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டும். எமது நம்பிக்கையை இழந்து விடாமல் வேற்று மதத்தின் துணையை எமது கத்தோலிக்க மறைக்குள் புரிந்துணர்வுடன் சேர்க்க வேண்டு மேயொழிய சாவே வரினும் இயேசுவை உதறித்தள்ளக் கூடாது. சிறந்த கத்தோலிக்கப் பெற்றோ ரின் குழந்தைகள் தமது எதிர்காலத்தைத் துணிவுடன் எதிர்கொண்டு தமது பரம்பரையின ருக்கும் நம்பிக்கை வாழ்வைக் கையளிக்கும் அளவிற்கு சாட்சியம் பகர வேண்டும்.

எமது வாழ்வில் எத்தகைய பருவத்திலும் எந்த வேளையிலும் எதிர்கொள்ளக்கூடிய அருட் சாதனமாக அமைவது நோயில்பூசுதலாகும். வாழ்க்கையில் ஏனைய அம்சங்களை விட விழிப்போடு இருக்கவேண்டிய உந்துதலை எமக்கு அளிப்பது இஃதாகும். குடும்ப செபத்தின்போதும் அன்றாடம் வீட்டி லிருந்து புறப்படும்போதும், தீராத நோய்களினால் பீடிக்கப்படும் சந்தர்ப் பங்களிலும் செபவாழ்வில் அடிக் கடி தம்மை தமது அன்றாட செயற் பாடுகளினூடாக ஈடுபடுத்துவதன் மூலம் மரணம் எப்போதும் எம்மை அணுகலாம் என்ற எண்ணக் கருவை பெற்றோர் பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டும். மேலும் திடீர் மரணங்கள் வராதவாறு நல்ல மரணத்திற்காக நாம் செபித்து வந்தால் நிச்சயம் நோயில் பூசுதல் என்னும் அருட்சாதனத்தையும் திருத்தந்தையின் பாவப் பொறுத்தல் பரிபூரண பலனையும், வழிப்பயண உணவாக நற்கருணையையும் பெற்று நல்ல மரணமடைந்து இறைஇரக்கத்திற்கு ஏற்ப நித்திய சம்பாவனையையும் அடைய முடியும்.



இவ்வாறு அருட்சாதன வாழ்வின் மறை உண்மைகள் எம்மில் உறுதியோடு பிரகாசிக்க அப்போஸ்தலர்களின் விசுவாச உண்மைகளை அறிக்கையிடும் விசுவாசப் பிரமாணத்தை எமது குடும்ப செபத்தில் அர்த்தத்துடன் செபிப்பதன் மூலமும் நம்பிக்கைவாழ்வு பலப்படுத் தப்படுகிறது.

### குடும்பத்தில் திருவருட் கருவிகளின் பயன்பாடு

ஆதித்திருச்சபையில் இருந்து இன்று வரை, மறைத்துன்பங்களின் போதும், (கலாபனைகள், போர்கள்) குருக்கள் இல்லாத வேளைகளிலும் கத்தோலிக்க நம்பிக்கை உறுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட உதவியானவை திருவருட் கருவிகளாகும். எனவே திருவிவிலியம், திருச் செபமாலை, திருச்சொரூபங்கள், திருநீர், திருச்சிலுவை, செபப்புத்தகங்கள், திருப்படங்கள், வெரோணிக்கங்கள் போன்ற திருவருட்கருவிகளின் பாவனை கத்தோலிக்க நம்பிக்கை வாழ்வை வளர்ப்பதால் ஒவ்வொரு கத்தோலிக்கரும் இவற்றை வைத்திருப்பதும், அவற்றைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதும் அவசியம். அத்துடன் சிறுபராயந் தொட்டே தமது பிள்ளைகள் இவற்றைப் பயன்படுத்துவதற்கு உதாரணமாக வேதாகமத்தை அன்றாடம் வாசிப்பதற்கும், தம்முடன் எடுத்துச் செல்வதற்கும் பெற்றோர் வழிப்படுத்துவதுடன் முன் உதாரணமாகவும் விளங்க வேண்டும்.

## எச்சபையும் திருச்சபையா? எம்மதமும் சம்மதமா?

கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கைக்கு ஆப்பு வைப்பது போன்று கத்தோலிக்க சூழலை இல்லாமல் செய்வது போல கருத்தியல் போர்கள் நீண்ட காலமாக இடம் பெறுகின்றன. எந்தத் திருச்சபையும் திருச்சபைதான். எந்த மதமும் ஒன்றுதான் என்று மக்கள் விசுவாச உறுதிப்பாடு அற்ற நிலையில் மந்திகள் கொப்புத்தாவுவது போல தாவுகின்றனர். எனவே நம்பிக்கை வாழ்விற்கு அடித்தளமாக விளங்கும் குடும்பங்களின் கத்தோலிக்க பெற்றோருக்குத் தெளி வான சிந்தனையை வளர்க்கும் முகமாக இரண்டு முக்கிய விடயங்களை முன்வைக்கின்றேன்.

அ. ஏனைய சபையினருடன் நாம் சேர்ந்து கல்வி கற்பதோ பணி செய்வதோ தவறில்லை. ஆனால் எமது நம்பிக்கையில் எப்போதும் உறுதியாக இருக்க வேண்டும். இயேசுவுக்கு ஒரேயொரு மறையுடல்தான் இருக்க வேண்டும். அது ஆதியில் அவரால் ஏற்படுத்தப்பட்டு, மறைத்துன்பங்கள், பேதகங்கள் நிறைந்த வரலாற்றைத் தமது இரத்தத்தால் கழுவி, இன்றுவரை உடல்கள் அழியாமல் புனிதர்களாக இருக்கும் பலருடைய சாட்சியத்தால் வளர்த்தெடுக்கப்பட்டது கத்தோலிக்க திருச்சபையே ஆகும்.

தமது சுயநலத்தாலும், ஏனையோரின் எதிர் சாட்சியத்தாலும் பிரிந்து போனவர்களை எவ்வாறு "திருச்சபைகள்" என்று கூறமுடியும்? இயேசுவின் மறையுடலாகிய கத்தோலிக்க திருச்சபையையும், அதன் ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் என்னும் உயர்பண்புகளைப் பிரித்துப்பார்ப்பவர்களுடனும் எவ்வாறு நாம் சரி சமமாக வாழமுடியும்?

ஆ. ஏனைய மதத்தினருடன் நாம் பழக வேண்டும்; வேலை செய்ய வேண்டும்; சமூக முயற்சிகளில் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இது வாழ்வியலின் ஒரு கட்டம். ஆனால் திருமுழுக்கின்போது தனது தூய விலைமதிப்பில்லாத இரத்தத்தால் எம்மைத் தனது சகோதரர்களாகவும், தந்தையின் பிள்ளைகளாகவும் மாற்றிய எம் மூத்த சகோதரன் இயேசுவிற்கு எவ்வாறு நாம் துரோகம் செய்து எம் மதமும் சம்மதம் என்ற அலட்சியப் போக்கில் வேறு மதத்திற்குப் போகமுடியும்? நான்கு மறைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. வேறுபாடுகள் கொண்டவை. "வழியும், உண்மையும், வாழ்வும் நானே, என் வழியாயன்றி எவரும் பரம தந்தையிடம் செல்வதில்லை." (யோவா14:6) "இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. வானத்தின் கீழ் மனிதரிடையே நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்புப் பெறுமாறு இவரது பெயரன்றி வேறு எப்பெயரும் கொடுக்கப் படவில்லை." (திரு.தூ.ப. 4:12) என்னும் இறைவார்த்தைகளே மேற்கூறப்பட்ட விடயங்களுக்குச் சான்றாக உள்ளன.



எனவே கத்தோலிக்க நம்பிக்கை வாழ்வை மென்மெலும் ஆழப்படுத்தும் முகமாக திருத்தந்தையால் முன்னறிவிக்கப்பட்ட நம்பிக்கை ஆண்டிலும், தொடரும் எம் வாழ்நாளிலும் எமது நம்பிக்கை வாழ் வின் வேரினை எம் குடும்பங்களிலி ருந்தே ஆழமாக்க முன்வந்து உறுதி பூணுவோம். இறைவன், மனிதன், உலகம் இம் மூன்றையும் பற்றி விசுவாச ஒளியில் அறிவதே மறைக்கல்வி. மறைக் கல்வியினூடாக திருத்தூதர்களின் விசுவாச உண்மைகளை எம் பிள்ளைகளுக்கு ஆழமாகப் புகட்ட முனைவோம். மறைக்கல்வி ஒவ்வொருவருடைய நம்பிக்கை வாழ்விற்கு இன்றியமை யாததாக விளங்குகின்றது. ஆகவே நம்பிக்கையின் அடித்தளமாக விளங்கும் குடும்பங்கள் தமது எதிர்காலத்தினருக்கும் அதனைக் கையளித்துப் பாதுகாப்பதில் கருத்தாய் இருக்க வேண்டும் என்பதே எமது அவா! ஏனெனில், "அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்." (உரோ 10:11) என திருத்தூதரான புனித பவுல் ஆதித்திருச் சபையிலிருந்தே சான்று பகர்ந்துள்ளார்.

## உசாத்துணை நூல்கள்/ சான்றாதாரங்கள்


1. பரிசுத்த வேதாகமம்
2. ஆசிரியர் தலையங்கம் மன்னா! (மன்னார் மறைமாவட்டம்) நவ.2012
3. பாதுகாவலன் (1971.03.06), ஒக்டோபர்.2012
4. திருவருட்சாதனத் துணைநூல் (வெளியீடு. யாழ் மறைமாவட்ட இறைபணிக்குழு. புனித வளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம். பக் : 176-177
5. அதி.வண.ஆயர் வ.தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரைக் குறிப்பேடு (முந்நாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்கள், இருவரதும் மறைக்கல்விப் பணி - 29.10.2012. பக்20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாச வாழ்வுக்கு முன்னுதாரணமான மரியாள்

அருட் சகோதரன் அ.யூட் கறோவ் அமதி
இறையியல் 3ம் வருடம்



மாற்றம் ஒன்றே மாற்ற முடியாது என்பதற் கிணங்க மாறிவரும் உலகிலே பற்பல சவால்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டு வாழ்க்கை சக்கரத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் பல மனிதர்கள் மத்தியில், கத்தோலிக்கராகிய நாமும் இறை பிரசன்னத்தை சந்தேகிக்கும் அளவுக்கு பல பிரச்சனைகள், துன்பங்கள், கவலைகள் மலையாக எழுந்து எமது விசுவாச வாழ்வை ஆட்டம் காணச் செய்யும் அளவிற்கு பரந்து விரிந்து காணப்படுகின்றன. ஆயினும் தாய் திருச்சபையானது காலத்தின் தேவையுணர்ந்து எமது விசுவாச தளர்ச்சியை நீக்க பலவழிகளில் முயல்கின்ற வேளையில் இவ்ஆண்டை விசுவாச ஆண்டாகப் பிரகடனப் படுத்தி, அதன்மூலம் அனைத்து இறைமக்களும் இறைவனில் ஆழமான விசுவாசம் கொண்டு, எம் வாழ்வை அந்த இறைவன் காட்டும் வழியில் வாழ எம்மை அழைத்து நிற்கின்றது.

கிறிஸ்தவர்களாகிய எமக்கு, எம் வாழ்விற்கு விசுவாசம் என்னும் இறையியல் புண்ணியமானது அடி நாதமாகவும், அச்சாரமாகவும் அமைகின்றது. திருவிவிலியத்திலே விசுவாசத்திற்கு மேல்வரிச்சட்டமாக திகழ்ந்த பல மனிதர்களை நாம் காண்கின்றோம். அவர்கள் எவ்வாறு தமது வாழ்வை இறைவனுக்கு முற்றாக அர்ப்பணித்து, இறைசித்தத்திற்கு சாட்சியாக வாழ்ந்தார்கள் என எமது விசுவாச வாழ்வுக்கு முன்னுதாரணமாக தரப்படுகின்றார்கள்.

அந்த வகையிலே கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் மிக முக்கியமான இடம் பெறுபவள் தான் அன்னை மரியாள். இறைமகனைப் பெற்ற எம் அன்புத்தாய் மரியாள் தன் வாழ்வாலும், வார்த்தையாலும் விசுவாசத்துக்கு மேல் வரிச்சட்டமாக திகழ்ந்ததுடன், எம் விசுவாச வாழ்விற்கும் முன்னுதாரணமாகின்றாள். அவளது முன்மாதிரிகையைப் பின்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் அன்புப்பிள்ளைகளாகிய நாமும் எடுத்துக்காட்டான விசுவாச வாழ்வை வாழ வேண்டுமென திருச்சபை எமக்கு அறைகூவல் விடுக்கின்றாள்.

## யார் இந்த மரியாள்?

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நாசரேத் என்னும் ஊரில் வாழ்ந்தவளும், சூசை என்பவருக்கு மண ஒப்பந்தமானவளுமான ஒரு யூத இளம் பெண்தான் மரியாள். மனித புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இறைத் தந்தையின் உதடுகளில் தவழ்ந்த வார்த்தையை மனித புலன்களால் புரிந்து கொள்ளும் விதத்தில் நம்மில் ஒருவராக மனுக்குலத்துக்கு கொண்டு வந்தவர் தான் அன்னை மரியாள். ஆண்டவருக்கு 'ஆம்' என்று பதிலளித்த ஒரு சிறந்த, மேன்மை தங்கிய அருள் மிகப்பெற்ற, இறைவனால் நிறைவாக ஆசீர் வதிக்கப்பட்ட பெண்மணிதான் மரியாள். இறைவனோடு, இறைவனாக இருந்த வார்த்தைக்கு மனுவுரு கொடுத்தவள். மேலும் விண்ணையும் மண்ணையும் இறைவார்த்தை என்னும் பாலத்தால் இணைத்தவள். மண்ணுலகை மீட்கும் கடவுளின் மீட்புப் பணியில் அவருடன் ஒத்துழைத்து, தூய ஆவி தங்கும் தூய இல்லிடமாக தன்னை மாற்றினாள். தூய ஆவியானவரை தன்னில் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவரை தன்னில் முழுமையாக செயற்பட அனுமதித்து இறுதியாக அச்செயற்பாட்டின் விளைவாகிய இயேசு என்னும் இறைக்கனியை மனுக்குலத்தின் மீட்புக்காக இவ்வுலகிற்கு அளித்த முதல் நபர் எனும் பெருமைக்குரிய பெண்தான் எம் அன்னை மரியாள்.

திருச்சபையின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் மிகவும் முக்கியம் வகிக்கும் மரியாவுக்கு, திருச்சபையானவள் பல விசுவாச கோட்பாடுகளை வழங்கியுள்ளதுடன், இயேசுவுக்கு அடுத்த படியான மேலான இடத்தைக் கொடுத்து அவளை பெருமைப்படுத்துகின்றது. 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்திலும் அன்னை மரியா பற்றி சிறப்பாக கூறப்படுகின்றது. "ஆதாமின் மகளான மரியா கடவுள் வாக்குக்கு இசைவு அளித்ததால் இயேசுவின் தாயானார். பாவத்தடையின்றி தன் முழு இதயத்தோடு கடவுளின் மீட்பு திருவுளத்தை ஏற்று தம்மையே ஆண்டவரின் அடிமையாக முற்றிலும் கையளித்தார். அவள் தன் நம்பிக்கையாலும், கீழ்ப்படிதலாலும் மனித இனத்தின் நிறைவாழ்வுக்கு தன்னுரிமையுடன் ஒத்துழைத்தவள்" (தி.கோ.இல56). இவ்வாறு மீட்புத் திட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்தி, சிலுவையடியில் எம் அனைவருக்கும் தாயாக இயேசுவால் தரப்பட்டவள், தொடர்ந்தும் எமக்காக தன் மகனிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கின்றாள்.

## மரியாவின் விசுவாசம்

விசுவாசம், இறைவனால் மனிதனுக்கு வழங்கப்படும் ஒரு அளப்பரிய கொடையாகும். இறைவனால், உயரிய நோக்கத்துக்காக படைக்கப்பட்ட மனிதன் ஒவ்வொருவரும் அதற்கான பாதையில், வரும் ஒவ்வொரு நிகழ்வையும் முழுமனதுடன் ஏற்று இறைவனின் துணையுடன் முன்நோக்கி செல்வதற்காகவே, அக்கொடை வழங்கப்படுகின்றது. இதைத்தான் எபிரேயருக்கு எழுதப்பட்ட நூலில் திருமுக ஆசிரியர் "நம்பிக்கையாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க முடியாது. (எபி 11:7) என கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்த வகையில் அன்னை மரியாவில் விளங்கிய உயரிய புண்ணியமாக அவளது விசுவாசத்தை நாம் காண்கின்றோம்). அதுவே அவளில் விளங்கிய அனைத்து புண்ணி யங்களுக்கும் மேல்வரிச்சட்டமாக விளங்கியது என்றால் அது மிகையாகாது. "காணாமல் விசுவசிப்போர் பேறுபெற்றோர்" (யோவா 20:39) என தோமாவிற்கு இயேசு கூறியதற்கு இணங்க, கபிரியேல் தூதனின் மங்கள வார்த்தை மரியாவுக்கு புரியாத போதும், அவள் அதை விசுவசித்து "இதோ ஆண்டவரின் அடிமை" என இறைசித்தத்திற்கு அடி பணிந்தாள் (லூக் 1:34) இந்த வகையில் நற்செய்தியின் பின்னணியில் மரியாவின் உயரிய தன்மையை வியந்து போற்றப்படுவது, அவளது அறிவாலோ, தகமையாலோ, அல்லது அவளது ஞானத்தாலோ அல்ல, மாறாக அவளது சிறந்த விசுவாசத்தாலே மரியாவும் மற்றைய சாதாரண மனிதரைப் போல பயந்தாள், என்ன நடக்குமோ என வியந்தாள். ஆயினும் இறைவனை விசுவசித்தாள். அதனால் இறைவன் அவளை நிறைவாக ஆசீர்வதித்தார். நாம் பல முறைகளில் நினைப்பது போலல்லாமல், ஒரு சாதாரண தாயை போல அவளும் பல நிலைகளில் துன்பப்பட்டாள். ஆனால் அவற்றிற்கு அவள் அறிவு பூர்வமாக சிந்தித்து விடை காண்பதை விட, அனைத்தை யும் இறைசித்தம் என ஏற்று அதற்கு இசைந்து நடந்தாள். எல்லா நிகழ்வுகளுக்கும் காரண கர்த்தா இறைவனே, அவரால் இயலாதது ஒன்றுமில்லை என விசுவசித்தாள்.

விசுவாசம் என்னும் சொல்லுக்கு இறைவனுக்கு தன்னை முழுமையாக விட்டுக்கொடுத்தல் என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது முழு மன சம்மதத்தோடு இறைவனுக்கு 'ஆம்' என்று கூறுதல். மரியாவின் விசுவாசமும் அத்தகையதே. எலிசபேத்தம்மாள் மரியாவை கண்டதும் "இறைவனின் வாக்குறுதி நிறைவேறும் என நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக் 1:45) என போற்றுகின்றாள். அவளது விசுவாசத்தை புகழ்கின்றார். மரியா தனது மங்கள வார்த்தை முதல் (தனது) விண்ணேற்பு வரை தனது விசுவாசத்தை வாழ்ந்தாள் அதை வாழ்வாக்கினாள் மரியாவின் மங்கள வார்த்தையின்போது அவளுக்கு இரு அசாதாரண வெளிப்பாடுகள் கொடுக்கப்படுகின்றன.

i. அருள் மிகப் பெற்றவள்
ii. பரிசுத்தாவியால் கருத்தாங்கி உலகமே எதிர்பார்த்திருந்த மீட்பரை பெற்றெடுப்பாள்

இவை சாதாரண மனிதருக்கு இயலாத ஒன்றாக அமைந்த போதும், கடவுளால் இயலுமான தாகவும், அவரால் ஆகாதது எதுவுமில்லை எனவும் மரியாள் விசுவசித்தாள். உமது வார்த்தையின் படியே எனக்காட்டும் என்னும் மரியாவின் பதிலுரை (லூக் 1:38) இறைதிட்டத்தில் தனது முழுமையான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் எமக்குக் காட்டுவதோடு, இறைவன் மேல் கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் எழுந்த உறுதிமொழியையும் விளக்குகின்றது. இதையே புனித அகுஸ்தினார் "அன்னை மரியாள் இறைவன் மேல் கொண்ட விசுவாசத்தால் இயேசுவை தன் இதயத்தில் தாங்கினாள், அதன் பின்னர் தன் வயிற்றில் கருத்தாங்கினாள்" எனக் கூறுகின்றார். மரியாவின் வாழ்க்கையில் அவளின் விசுவாசத்துக்கு சவாலான பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறிய போதும் அவற்றையெல்லாம் அவள் மனதில் இருத்தி சிந்தித்து வந்தாள். (லூக் 2:52) அதன்மூலம் இறைவனின் ஆவி தன்னில் மென்மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொள்ள, அவர் அருளால் நிரப்ப, தன்னை மென்மேலும் வலுப்படுத்த இடமளித்தாள்.



மரியாளின் விசுவாசம் அவளது வாழ்வுக்கு ஊட்டமளித்தது மட்டுமல்லாமல், அனைத்து மானிடரினதும் மீட்புக்கும் காரணமாய் அமைந்தது. இறைவனின் மீட்பு அலுவலில் அவருடன் இணைந்து பங்களிப்பு செய்தாள். இதையே புனித இரேணியஸ் "மரியாள் தனது கீழ்ப்படிதலால் அனைத்துலக மீட்புக்கும் காரணியாக திகழ்ந்தாள்" என கூறுகின்றார். அவளது உள்ளத்தை வாள் ஊடுருவிய போதும், அவள் இறுதிவரை தனது விசுவாசப்பயணத்தை தொடர்ந்தாள். இறைவனுக்கு கொடுத்த வாக்குறுதியில் சற்றும் தளராமல் விசுவாசத்தால், அனைத்து கொடிய வேளைகளையும் வெற்றி கொண்டாள்.

மீட்பு வரலாற்றிலே மரியாவைப்போல் இறைவிசுவாசத்தில் விஞ்சியவர்கள் எவருமில்லை என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் மரியாள் மற்ற அனைவரையும் விட இறைவனில் ஆழமான அன்பும், பற்றுதியும் கொண்டவளாக திகழ்ந்தாள். அதனால் தான் கபிரியேல் தூதன் சொன்ன மங்களவார்த்தை மறையுண்மை அவளுக்கு பெரிதாக புலப்படாத போதும், சஞ்சலம் இல்லாமல் விசுவாசத்தோடும், அன்போடும் கீழ்ப்படிவோடும் ஏற்றுக் கொண்டாள். இதனால்தான் புனித அகுஸ்தினார் "வார்த்தை மனுவுருவாகும் மறைநிகழ்ச்சிக்கு மரியாள் அடிபணிந்தபோது அவள் விண்ணகத்தையே மானிடத்துக்காக திறந்து வைத்தாள்" எனக் கூறுகின்றார்.

### மரியா விசுவாசத்தின் எடுத்துக்காட்டு

அன்னை மரியின் வாழ்வு முழுவதுமே திருச்சபைக்கும், அதில் அங்கம் வகிக்கும் விசுவாசிகளாகிய எம் ஒவ்வொருவருக்கும் ஒரு முன்னுதாரணமாகவும், மேல்வரிச்சட்டமாகவும் விளங்குகின்றது. இறைவனின் தாயாகும் பேறு அளிக்கப்பட்டபோதும், அதை அவள் சலுகையாக கருதாது, ஒரு சாதாரண பெண்ணாக நாளும் பொழுதும் ஆன்மீகத்திலும், இறை உறவிலும், விசுவாசத்திலும் வளர்ந்தாள். தன் வாழ்வில் நடந்த ஒவ்வொரு பிரச்சனைக்கும் தளராத நம்பிக்கையுடனும், விசுவாசத்தோடும் முகம் கொடுத்தாள். அத்துடன் இயேசுவின் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும், குறிப்பாக அவரது பணி வாழ்வில் வந்த எதிர்ப்புகள், சோதனைகள், கஸ்ரங்கள், மறுதலிப்புக்கள், தனிமைகள் ஒவ்வொன்றையும் விசுவாசக் கண்ணோட்டத்தோடுநோக்கியதுடன், அவருடன் உடன் பயணித்து, பணி வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோக்கி செல்லும் வண்ணம் உற்சாகப்படுத்தினாள். அன்னையின் உள்ளம் முழுவதும் ஆண்டவருடைய வார்த்தையால் நிறைந்திருந்தது. அது என்றும் அவளது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. தனது சொல்லாலும், செயலாலும் ஆண்டவரின் திட்டத்தை நிறைவேற்று வதையே தனது வாழ்வாக கொண்டு செயற்பட்டு வந்தாள். இந்த வகையில் எதிர்நோக்கிற்கே இடமில்லாதது போல தோன்றினாலும் எதிர்நோக்கிய ஆபிரகாமை போன்று (உரோ 4:18) தனக்கு வழங்கப்பட்ட அருளில் முற்றாக நம்பிக்கை கொண்டு ஆபிரகாமை போல விசுவா சத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள்.

இவ்வாறுமரியாவின் விசுவாசமும், இறைவனில் கொண்ட உறுதியான பற்றுறுதியும் எமக்கு முன்னுதாரணமாக திகழ்வதுடன், எமது விசுவாசத்துக்கு ஒரு சவாலாகவும் அமைகின்றது. அன்று மரியாள் இறைவனின் அழைப்புக்கு 'ஆம்' என்று பதிலளித்து மீட்புதிட்டத்தில் அவரோடு ஒத்துழைத்தாள். ஆனால் நாம் இன்று இறைவனின் வார்த்தைக்கு எவ்வாறு பதிலளிக்கின்றோம். விசுவாசம் இறைவன் எமக்கு தரும் அளப்பரிய கொடையாக காணப் பட்டாலும் அதை விருத்தி செய்து பலனளிக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையும், பொறுப்புமாகும். நல்ல நிலமாகிய மரியாவின் உள்ளத்தில் விழுந்த விசுவாசம் எனும் விதை செழித்து வளர்ந்து பல மடங்கு பலன் கொடுத்தது போல, எம் மனதிலும் விதைக்கப்பட்ட விசுவா சம் என்னும் விதையானது பலன் கொடுக்க எமக்கு செப, அர்ப்பண, உளதூய்மை மிகுந்த எளிமை வாழ்வு மிகவும் அவசியம். அப்போது தான் எமது விசுவாச வாழ்வும் மரியாவை போன்று செழிப்புற்று மிளிரும்.

நாம் ஒவ்வொருவரும் திருமுழுக்கின் மூலம் இறைவனின் அன்பு சீடராக வாழ மிக நெருங்கிய முறையில் அழைக்கப்படுகின்றோம். எனவே எமக்கு தரப்பட்ட விசுவாசத்தின் மூலம் இயேசு வோடும், எம் அயலவரோடும் அன்புறவில் இணைக்கப்பட வேண்டும். விசுவாசத்தின் மூலம் மரியாவைப்போல இறைவன் ஒருவரே எம் மீட்பும், அடைக்கலமும், உறைவிடமும் என முழு மையாக ஏற்றுக்கொண்டு அதை வாழ்வாக்குவது எமது கிறிஸ்தவ அழைப்பாக திகழ்கின்றது. மரியாள் இறைவனில் விசுவாசம் கொண்டு தன்னை இறை சித்த்திற்கு கையளித்தாள். மரியா எப்போதும் தன்னை தாழ்த்தி இறைவனுக்கு பணிந்து செயற்பட்டாள். எதிலும் தன்னலமோ, பெருமையோ பாராட்டியவள் அல்ல எம் அன்னை மரியாள் இதுவே அவளது உயர்வுக்கும் காரணமாய் அமைந்தது. "நானல்ல இறைவா நீயே என்னைத் தேர்ந்தாய்" என உணர்ந்து, "இதோ உமது அடிமை" என தன்னை முற்றிலும் இறைவனின் பொறுப்பில் ஒப்படைத்தாள்.

எனவே எண்ணற்ற புண்ணியங்களை தன் வாழ்வாக்கி இறைவன் மேல் அசையாத நம்பிக்கை கொண்டு விளங்கிய இறைவனின் தாய் மரியாள் எம் அனைவருக்கும் தாயாக கிடைக்கப் பெற்றது நாம் பெற்ற பெரும் பேறாகும். எனவே அந்த அன்னை காட்டிய முன் மாதிரிகையான வாழ்வை பின்பற்றுவோம். அன்னைவழி இறைவனிடம் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாச வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள் அவற்றை மேற்கொள்ளும் வழிமுறைகள்

அருட்பணி. சூ.டக்ளஸ் மில்ரன் லோகு
இயக்குனர்,
அன்பிய விவிலிய ஆணைக்குழுக்கள்,
மன்னார் மறைமாவட்டம்.

## முதலாக...

தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு அச்சம் அகன்றவர்களாக துணிச்சலோடு பகிரங்கமாக பறைசாற்றிய திருத்தூதர்களின் வாய்ச்சொல்லாய் அமைந்தது, “யூதர்களாகிய நீங்கள் நாசரேத்தூர் இயேசுவைக் கொன்று விட்டீர்கள். அவர் உயிர்த்து விட்டார் அதற்கு நாங்கள் சாட்சிகள்” (தி.தூ 2:23-24) என்பதாகும். இதுவே தொடக்ககால திருச்சபையின் முதல் விசுவாச அறிக்கை. ‘இயேசுவே ஆண்டவர்’ என வாயார அறிக்கையிட்டு உயிர்த்த ஆண்டவர் அவரை உள்ளூர நம்பி மீட்படையும் வழிதனில் பயணம் தொடர பணிக்கும், பயணிக்கும் திருச்சபையின் வாழ்வியலில் எண்ணிறைந்த மனிதர்கள் விசுவாச விருட்சத்திற்கு வேராகி, விதையாகி, விழுதாகி புனிதர்களாகப் புகழ் பூத்துள்ளார்கள். அவர்கள் அப்பயணத்தில் எதிர்கொண்ட சவால்களும் அவற்றை மேற்கொண்ட வழிமுறைகளும் அன்றும் இன்றும் எமக்குப் பாடம் படிப்பித்துக்கொண்டே இருக்கின்றன.

பல முறை பல வழிகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய மூவொரு கடவுளை முழுமையாக நம்பி வாழ தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகிய இஸ்ரயேல் மக்களின் விசுவாச வாழ்வில் ஏராளமான சவால்களை, சறுக்கல்களை, அதிலிருந்து மீள முயன்ற வழிவகைகளை திருவிவிலியம் தன்னகத்தே பதிவாகக் கொண்டுள்ளதை நாம் காணலாம். இந்தவகையில் வேதாகமத்தின் பழைய, புதிய ஏற்பாடுகள் பொதிந்து வைத்துள்ள விசுவாச வழிமுறைகள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் மரபியலில் விசுவாசத்தை தற்காக்க முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் உசாத்துணை கொண்டு விசுவாச வாழ்வின் சவால்களையும் அவற்றை மேற்கொள்ளும் வழிமுறைகளையும் எழுத்திடுவதே இக்கட்டுரையின் கருப்பொருளாகின்றது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

## 01. சிலையின் முன்...... இறையின் முன்..........

கத்தோலிக்க தேவாலயங்களில் காணப்படும் சுரூபங்களை கேள்விக்குட்படுத்தி சாமானிய கத்தோலிக்க விசுவாசிகளை குழப்பும், திசைமாற்றும் கைங்கரியம் பல ஆண்டுகளாக பிரிவினை சகோதரர்களால் மேற்கொள்ளப்படுவது யாம் அறிந்ததே. இவ்விடயம் எமது விசுவாச வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஒரு சவாலே. இச்சாவாலை மேற்கொள்ள நாம் இதுகுறித்த சரியான புரிதலைக் கொண்டிருப்பதும் அதனை சிறியோர், இளையோர், முதியோர் மறைக்கல்வி வழியாக அனைவருக்கும் புகட்டுவதும் அவசியமாகின்றது.

பழைய ஏற்பாட்டில் இறைவன் தாம் தேர்ந்தெடுத்த இஸ்ரயேல் மக்கள் மத்தியில் தம் உடனிருப்பை நினைவுபடுத்த ஒரு பேழையையும் அதன் மேல் ஓர் அரியணை, அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபுறமும் கெருபீம் உருவமும் வைக்கப் பணித்தார் (காண் வி.ப 25:10-22, எபி 9:5). இஸ்ரயேல் மக்கள் சென்ற இடங்களிலெல்லாம் அதனை எடுத்துச் சென்றனர். அதற்கு ஆசாரக் கூடாரம் அமைத்தனர். அதன் முன் விழுந்து கடவுளை ஆராதித்தனர் (காண் எண் 20:6, யோசு 7:6). தாவீது அதன் முன் நடனமாடினார் (2 சாமு 6:14). எனவே இறைவனை நினைவுபடுத்தும் அடையாளங்கள், சின்னங்கள், சுரூபங்களை வைத்திருப்பதை தவறாக்க முனைவோரின் விவிலிய அறிவீனத்தை அகற்றுவோம்.

கி.பி 787ல் கூடிய நிசேயா திருச்சங்கம் "புனிதர்களுக்கு செய்யும் வணக்கம் சிலைவழிபாடு அல்ல, புனிதர்களின் திருவுருவங்களுக்கு மரியாதை செய்வது அவர்களுக்குச் சேர்வதனால் அது பக்திக்குரியது" என அறிக்கையிடுகின்றது. 2ம் வத்திக்கான் சங்கம் "விசுவாசிகளின் வணக்கத்திற்காக கோயில்களில் திருவுருவங்களை வைக்கும் வழக்கம் நிலைத்து நிற்கட்டும். ஆனால் அவை இறைமக்களிடையே வியப்பை விளைவிக்காமலும் தவறான பக்தியில் அவர்கள் இன்பம் காணாமலும் இருக்குமாறு குறைந்த அளவிலும் சரியாக நிரலிட்டும் வைக்க வேண்டும்" எனக் கூறுகின்றது.

நமது விசுவாச வாழ்வில் புதிய பார்வையில் எண்ணிறைந்த சிலைவழிபாடுகளை நாம் சவாலாக எதிர்கொள்கின்றோம். அவற்றை அறியவும் அவற்றினின்று விடுபடும் வழிகளை நமதாக்கவும் இவ்விசுவாச ஆண்டில் முயலுவோம்.

## 1.1 மனிதர்கள்

மனிதர்களை இறைவனுக்குச் சமமாக நடத்தினால் அது சிலைவழிபாடே. ஆட்சியாளர்கள், அதிகாரம் கொண்டோர் இறைவனைப் போல் தங்களை உயர்த்திக் கொள்வதை உலகில் காண்கின்றோம். அவர்களுக்கு அடிவருடிகளாக மாறும் போது நாமும் இறையின் முன்னிருப்பதை அந்நியப்படுத்தி சிலையின் முன் தெண்டனிடுபவராகின்றோம்.

எனவே மனிதர்களுக்குரிய மதிப்பை, மாண்பைக் கொடுக்கவும், தலைவர்களை, அதிகாரிகளை ஆண்டவனாக்கும் மடமையை அறவே அகற்றவும் முனைவோம்.

## 1.2 செல்வம்

கடவுளுக்குப் பதிலாக செல்வத்துக்கு அதிக முக்கியத்துவமும் முதன்மையும் அளிக்கும் போது அது சிலைவழிபாடாக அமைகின்றது. "சிலைவழிபாடான பேராசை" (கொலோ 3:5) என்றுரைக்கிறார் பவுலடியார்.

எனவே பணம், செல்வம், உடைமை அனைத்தையும் அளவோடு தேடி அளவுக்கதிகமானதை அன்றாட வாழ்வுக்கு வழியறியாதவரோடு பகிர்ந்து அதனால் வரும் ஆனந்தத்தை அடைய முயலுவோம்.

## 1.3 உலக இன்பங்கள்

"வயிறே அவர்கள் தெய்வம், மானக்கேடே அவர்கள் பெருமை" (பிலி 3:19) என சொல்கிறார் பவுலடியார். வயிறும் அதை நிரப்பும் உணவும் இறைவனின் இடத்தை எடுத்துக்கொண்டால் அதுவும் ஒரு சிலைவழிபாடாக உருமாறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

எனவே உலக இன்பங்கள் இறைவனின் இடத்தை எடுக்க விடாது அளவோடு உண்டு வளமோடு வாழ முயலுவோம்.

## 1.4 தொலைக்காட்சி/ அலைபேசி

இன்றைய புதிய சிலைகளில் தொலைக்காட்சியும் அலைபேசியும் அணிவகுத்து நிற்கின்றன. குடும்பச் செபம், குடும்ப செபமாலை, குடும்பமாக இருந்து உரையாடுதல், குடும்பமாக இருந்து உணவு உட்கொள்ளுதல் எல்லாம் இன்று காணாமல் கதியிழந்து போகக் காரணம் இந்தத் தொலைக்காட்சியும் அலைபேசியும் என்றால் அது மிகையாகா. மணவாழ்வில் குழப்பம் ஏற்படுத்தி மணமுறிவு, கருக்கலைப்பு, தவறான பாலுறவு போன்றவற்றிற்கு இன்று தூபம் போடுபவை இவை. நமது விசுவாச வாழ்விற்கு இவை பெரும் சவாலாக உள்ளதை கண்கூடாக காண முடிகின்றது. கடவுளோடு செபத்தில் உரையாட நேரமில் லாதவர்கள் அலைபேசியில் ஆர்வமாக மணிக்கணக்கில் அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் இல்லாவிட்டால் பரவாயில்லை கைபேசி கட்டாயம் வேண்டும் என்னும் மனநிலையில் அநேகர் உள்ளனர்.

எனவே தொலைக்காட்சியும் அலைபேசியும் இறைவனின் இடத்தை எமது வாழ்வில் எடுக்க விடாது தேவைக்குத் தக்கவாறு பொழுது போக்கு சாதனங்களையும் தொடர்பு சாதனங்களையும் துஸ்பிரயோகம் இல்லாது பயன்படுத்தி பலன் பெற முனைவோம்.

## 1.5 வேலையோ வேலை

இறைவழிபாட்டிற்கும் இறைபணிக்கும் உடல் ஓய்விற்கும் நேரமில்லாது ஓயாத பணிப் பளுவை பார மூட்டையாக சுமக்கும் பணிப்போதையாளர்களை (Workaholics) காணுகிறோம். ஞாயிறு தினம், கடன்திருநாட்களிலும் கடவுளை தேடாது வழிபாட்டில் கலந்து கொள்ளாது வேலையின் மீது மித மிஞ்சிய பற்று வைத்து இறைவனை இரண்டாம் நிலைக்குப் புறந்தள்ளுவதும் சிலைவழிபாடே.

எனவே ஞாயிறு திருப்பலியிலும் கடன்திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்க வேண்டுமென்ற திருச்சபையின் ஒழுங்கு நியமத்தினை கருத்தாக கடைப்பிடிப்பதோடு ஓய்வு நாளில் அதிகமாக இறைவனைப் பற்றிச் சிந்தித்து இயேசுவின் உயிர்ப்பின் நிறை மகிழ்வை இதயத்தால் அனுபவிக்கும் ஆற்றல் பெறுவோமாக.

## 1.6 சாதியுணர்வு

திருமுழுக்கின் வழியாக ஒரே தந்தையின் பிள்ளைகளாகிய கத்தோலிக்கர் அனைவரும் சகோதர சகோதரிகளாக வாழ்வதற்கான மேலான அழைப்பைப் பெற்றவர்கள். ஆனால் நடைமுறையில் தலைமுறையாக ஊடுகடத்தப்படும் சாதிய உணர்வைத் தலையானதாகக் கொண்டு காரியம் ஆற்றும் கத்தோலிக்கர் பலரின் வாழ்க்கை முறை விசுவாச வாழ்விற்கு முரணாக, இடறலாக அமைந்து நிற்கும் சவாலாக உள்ளது என்பதே உண்மை. அதுவும் வலிந்து அடக்கப்பட்ட ஈழத்தமிழரின் போராட்டத்திற்குப் பின்னாலான இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாதிய உணர்வு பல இடங்களில் தலைதூக்குவதை காண முடிகிறது. இறைவன் வாழும் தேவாலயத்தையே உனது எனது என கூறு போடத் துடிக்கும் எடுப்புகள் சில இடங்களில் ஏற்பட்டுள்ளது கண்கூடு. இறைவன் சொல்வதை மறுத்து சாதீயம் சொல்வதை ஏற்பது நவீன சிலைவழிபாடே.

எனவே கிறிஸ்துவை தலையாகக் கொண்டு நாம் எல்லோரும் ஒரே உடலின் உறுப்புகளாக ஒன்றாக இணைந்திருந்து ஒரே திருமுழுக்கு, ஒரே ஆவி, ஒரே சமபந்தியில் பங்கேற்கும் திருச்சபையினராக பரிணமித்து விசுவாச வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுக்க முனைவோம்.

## 02. அரசியலா... ஆண்டவனா...

அரசியலுக்கும் திருமறைக்கும் என்ன தொடர்பு? அரசியலுக்கும் அருட்பணியாளருக்கும் என்ன தொடர்பு? அரசியலுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன தொடர்பு? "அரசியல்வாதிகள் அவர்கள் வேலையைப் பார்க்கட்டும்; ஆன்மீகவாதிகள் அவர்கள் வரம்புக்குள் நிற்கட்டும்" என விமர்சன கேள்விக் கணைகளை எழுப்பி எதிர் நடவடிக்கையில் ஈடுபடுவது இக்காலத்தில் ஈழத்து கத்தோலிக்கர் விசுவாச வாழ்வில் சந்திக்கும் ஒரு சவாலாகிறது.

விடுதலைக் காற்றை விரும்பி அதைச் சுதந்திரமாக சுவாசிக்க முனையும் அனைவரின் பாற்பட்டது அரசியல். ஜனநாயக நாடாக ஒரு நாடு பரிணமிக்க மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை, அவலங்களை, அடக்குமுறைகளை அறிந்து அரசியலில் அனைவரும், சிறப்பாக கத்தோலிக்கரும் அருட்பணியாளரும் ஈடுபட வேண்டும் என்பது காலத்தின் அறிகுறிகள் நமக்கு விடுக்கும் அழைப்பாகும். அதாவது கட்சி அரசியலில் ஈடுபடுவதை விட உண்மையான, ஆழமான, நீதியான, விமர்சனப் பார்வையோடு தெளிந்த விழிப்புணர்வுக் கண்ணோட்டம் கொண்ட அரசியலில் ஈடுபடுவது அவசியமானதும் அவசரமானதுமாகிறது.

அநீதி அகற்றப்படும், அடக்குமுறை உடைக்கப்படும், சமத்துவம் ஆட்சி செய்யும் அரசியல் முறைமைக்கு உழைக்க 2ம் வத்திக்கான் திருச்சங்கம் எம்மை அழைக்கிறது. "தங்களது சொந்த நலனையோ பொருளாதார ஆதாயத்தையோ தேடாமல் குடிமக்கள் ஆர்வத்தோடு ஈடுபட முனைய வேண்டும். மேலும் அநீதி அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தனியொருவருடைய அல்லது அரசியல் கட்சியினுடைய சர்வாதிகாரப் போக்கு மற்றும் கொடுங்கோலாட்சிக்கு எதிராகவும் நேர்மையான நடத்தையால் முன்மதியோடு போராட வேண்டும். கபடின்றி நடுநிலை நேர்மையோடு அனைவருடைய நலனுக்காகவும் தங்களையே அர்ப்பணிக்க வேண்டும் (இன்றைய உலகில் திருச்சபை, எண் 75).

ஜே.பி.மெட்ஸ் என்பவர் கூறினார் "தனிப்பட்ட ஆன்மாவின் மீட்பைக் கருத்திற் கொள்ளும் 'வானக நோக்கு ஆன்மீகம்' பயனற்றது". இயேசுவின் படிப்பினையிலும் பணியிலும் அரசியல் இருந்தது. அவை அரசியலை மட்டும் சார்ந்தவையாக அமையவில்லை. மாறாக முழுமனித விடுதலையும் அடிப்படையான சமூக மாற்றத்தையும் சார்ந்ததாக அமைந்தது. அதுவே அவரது நோக்காக, போக்காக அமைந்திருந்தது.

எனவே எமது விசுவாச வாழ்வில் சவாலாக எதிர்படும் எமது நாட்டு அரசியல் நிலைமைகளை இயேசுவின் முழுமனித விடுதலைக் கண்கொண்டு எதிர்கொள்ளவும் சலுகைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசப்பு மொழிகளுக்கும் விலை போகாது அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து புறமுதுகிடாத கிறிஸ்தவ சாட்சியத்தால் விசுவாச வீரர்களாகத் திகழ முன்வருவோம்.

### பக்திப் பரவசமா..... முக்தி வழிமுறையா.......

இன்று இறைமக்களுக்கு எத்தனையோ பிரச்சனைகள். செய்வினை, சூனியம், தீராத நோய்கள், உள்மனக் கலக்கங்கள், உளவியல் வடுக்கள், ஆறாத காயங்களால் அவதியுற்று அமைதியிழந்து எத்தனையோ பக்தி முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இறைவனின் இரக்கப்பக்தி, அன்னையின் நாமத்தில் நவநாள் பக்தி, புனிதர் பெயரால் நவநாள் பக்தி, தவக்கால பாதயாத்திரை, 13வாரம் செவ்வாய் கிழமைகளில் அந்தோனியார் கோவிலுக்கு வேண்டுதலுக்கு செல்லுதல், மெழுகுதிரிச் செபம், கர்த்தரின் நூல் கட்டி வேண்டுதல் என எண்ணிறைந்த பக்தி முயற்சிகளில் பலர் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். எந்தத் திருத்தலத்திற்குச் சென்றால் தங்கள் நோய்கள் தீரும், பிரச்சனை நீங்கும் என்ற ஏக்கத்தோடு தேடி அலைந்து திரிகிறார்கள். "மன்னார் சுவாமியிடம் போவோம், மட்டக்களப்பு பிறதரிடம் போவோம், சிலாபத்து மங்கையிடம் போவோம், யாழ்ப்பாணத்து பாதரிடம் போவோம்" என அங்கும் இங்கும் சென்று எங்கும் எதுவும் கிடைக்கவில்லையெனில் கானல் நீரைக் கண்ட கலைமான் போல் சோர்ந்து போகிறார்கள். அடுத்த கட்டமாக "அந்தோனியாரைக் கொண்டு அவர் செபிக்கிறார், மிக்கேல் சம்மனசானவரைக் கொண்டு இவர் செபிக்கிறார்" என்று சென்று பார்த்து பலன் இல்லையென இருக்கும் போது "இதோ! நாம் வருகிறோம், இரட்சிக் கப்பட்டவர்கள் எங்களோடு இணைந்து விடுங்கள்" என பிரிவினை சபையார் மந்தையினின்று ஆடு களவாடும் காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றுகின்றனர். இப்படியாக விசுவாச வாழ்வில் பக்திப் பரவசத்திற்குட்பட்டு நோய் தீரும், பேய் போகும் என்ற அணுகுமுறையைக் கொண்டிருக்கும் சூழமைவு ஒரு சவாலாகவே உள்ளது.

பக்தி முயற்சிகளில் பல பொருளுடையவை. அவற்றில் ஈடுபடுவோரை அன்போடு அணுகி அவர்கள் மேற்கொள்கின்ற பக்தி முயற்சிகளிலுள்ள தீயவற்றை விலக்கவும் நல்லவற்றை நாடவும் கடவுளிடமும் அடுத்திருப்பவரின் நலனிலும் ஈடுபடவும் வைப்பது விசுவாச முதிர்ச்சி அடைந்தோரின் பணியாக அமைய வேண்டும். அவர்கள் அர்த்தமுள்ள இறையனுபவத்தை அடையவும் அன்பு, மன்னிப்பு வழியாக இவ்வனுபவம் உறுதியடைந்து இறைமகிழ்ச்சி பெருகவும் வழிகாட்ட வேண்டும். வெறுமனே பக்திப் பரவசமல்ல, முக்திக்கு வழிமுறையான கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்குவதனூடாக அகப்புற விடுதலையை, நற்சுகத்தினை, அருளினை அடைய முயலுவோம். முன்னேற்றுவோம்.

### முடிவாக...

கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றுச் சுவடுகளைத் திரும்பிப் பார்க்கையிலே ஆயிரமாயிரம் சவால்களை, சோதனைகளை, வேதனைகளை, வேதகலாபனைகளை, பிரிவினைகளை, பிறழ்வுகளை விசுவாசப் பயணத்தில் சந்தித்தே வந்துள்ளது. சந்தித்தது மட்டுமல்ல அவற்றை எதிர்கொண்டு வெற்றி கொண்டு குன்றின் மீதிட்ட தீபமாக பிரகாசிக்கின்றது. "இப்பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் பாதாளத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா" (மத் 16:18) என்ற இயேசு பெருமானின் ஆசீரோடு விசுவாச வாழ்வின் சவால்களை இன்றும் திருச்சபை எதிர்கொண்டே வருகின்றது. உலகத்தின் சக்திகள் கருக்கலைப்பு, கருணைக்கொலை, ஒருபால் திருமணம், மரபணு மனித உருவாக்கம் போன்றவற்றிற்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க கங்கணம் கட்டி நிற்கின்ற நிலையில் திருச்சபை இறைவன் குரலாக இவற்றை என்றுமே வன்மையாக எதிர்த்து வருகின்றது.

"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என நம்பிய நீர் பேறுபெற்றவர்" (காண் லூக் 1:45) என புகழப்பட்ட இறைவனின் தாய் தன் வாழ்வின் அனைத்தையும் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து விசுவாச வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு மேற்கொண்டது போல நாமும் இறைதுணையில் நம்பிக்கை கொள்வோமாக! ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் கூறிய வார்த்தைகள் விசுவாச வாழ்வில் நமக்கு வெளிச்சமாகிறது.

"கிறிஸ்தவர்களுடைய வாழ்வு மகிழ்வான அனுபவத்தையும் துயரமானதையும் அறிந்திருக்கிறது. எத்தனை புனிதர்கள் தனிமையில் வாழ்ந்திருக்கிறார்கள்! எத்தனை விசுவாசிகள் நமது காலத்திலும் கூட இறைவனின் ஆறுதலான வார்த்தைகளைக் கேட்க விரும்பியும் இறைவனின் மௌனத்தால் சோதிக்கப்படுகின்றனர்! வாழ்வின் சோதனைகள் சிலுவையின் பொருளைப் புரிந்துகொள்ள உதவுவதோடு இயேசுவின் துன்பங்களில் பங்கெடுக்கவும் நமக்கு உதவுகின்றன (காண் கொலோ 1:24). நமதாண்டவர் இயேசு தீமையின் மீதும், சாவின் மீதும் வெற்றி கொண்டு விட்டார் என உறுதியாக நம்புகிறோம். அத்தகைய அசைக்க முடியாத பற்றுறுதியோடு நம்மை நாம் அவரிடம் கையளிப்போம்" (நம்பிக்கையின் வாயில் எண், 14).

எனவே இறைவனின் முன் எம் இதயங்களை அர்ப்பணித்தவர்களாக முழுமனித விடுதலை வாழ்வை குறிக்கோளாகக் கொண்டு விசுவாச வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை விசுவாசத்தில் நிலைத்து வாழ்ந்த முன்னோரின் வழியில் இறை ஆவியின் நெறியாள்கையில் திருச்சபையின் கூட்டுறவில் எதிர்கொண்டு இறையாட்சி நோக்கி விசுவாச முதிர்ச்சிப் பயணம் தொடருவோம்.

துணை நின்ற நூல்கள் :-

01. ஜேம்ஸ் பீட்டர்.S,Fr, *தாய் திருச்சபையின் பதில்கள்*, அன்னை நிலையம்: ஆப்பெட் பிரஸ், சிவகாசி, 1993.

02. குமார் ராஜா. அருட்பணி, *உறவுகள் மலரட்டுமே*, வைகறைப் பதிப்பகம்: திண்டுக்கல், 2012.

03. அருமை சாமி. A,Fr, *தோழன்*, TNBCLC பதிப்பகம்: திண்டிவனம், மே – ஜூன் 2001.

04. செபஸ்தியான். ஆ.அருள்பணி, *தோழன்*, TNBCLC பதிப்பகம்: திண்டிவனம், மார்ச் 2003.

05. பெர்னார்டு லூர்துமேரி. அருட்சகோ, மொழிபெயர்ப்பு - *நம்பிக்கையின் வாயில்*, சகாய மாதா திருத்தலம், சென்னை, 2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகளாகட்டும் எம் விசுவசம்
## ("நம்பிக்கையின் வாயில்" அடிப்படையில்)

அருட் சகோ P.சார்லஸ் தயாளன்
3ம் வருட இறையியல்

**போலி உலகின் யதார்த்தம்**

தொடர்பு ஊடகங்களும், தொழில் நுட்பங்களும், பெருகி, புள்ளி விபரங்களுடன் கவர்ச்சியாக போதிப்பவர்களும் பெருகியுள்ள இக்கால கட்டத்தில், பொய்களுக்கும், போலிகளுக்கும் பஞ்சமில்லை. எது உண்மை, எது பொய் என்று தெரியாத அளவுக்கு போலிகளால் திரிவுபடுத்தப்பட்டு பொய்மை உண்மைபோல் காட்சியளிக்கின்றது. ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம், மாதாந்தம் வைப்பு செய்தால் இரட்டிப்பு வட்டி, மூன்று வாரத்தில் சரளமாக ஆங்கிலம் பேசும் வாய்ப்பு என்று கவர்ச்சிகரமான விளம்பரங்கள் வணிக உலகத்தில் மட்டுமல்லாது, அரசியலிலும், சமூக வாழ்விலும் பொய் வாக்குறுதிகளாக, போலி பிரச்சாரங்களாக பிரதாபித்து காணப்படுகின்றன.

ஒளியின் பாதையில், முன்னேற்றத்தின் படிக்கட்டுக்களில் வழிகாட்டுவதாக கூறிக் கொள்ளும் பலர், சாதாரண மக்களை , வாழ்வில் தடம்புரண்டவர்களை, வாழ்வில் எதுசரி எது தவறு என்று தெரிவு செய்ய முடியாத குழப்பநிலையில் உள்ள பலரை ஏமாற்றி, பொருள் சேர்த்து, அதன் மூலம் தங்கள் வாழ்வை முன்னேற்ற முயல்கின்றார்கள். தங்களை வளப்படுத்திக்கொள்ள மற்றவர் வாழ்வை நசுக்குகின்றார்கள். தாம் நிம்மதியாக வாழ மற்றவர் வாழ்வை தடம்புரள வைக்கின்றார்கள். இதனால் வாழ்வு மலரும் என்று விளம்பரங்களை ஒளியென நம்புவோருக்கு இறுதியில் எஞ்சுவது இருட்டடிப்பும், மன விரக்தியும், ஏமாற்றமுமே. இவ்வாறு போலியை உண்மையென காட்டி சாதாரண மக்களுக்கு நம்பிக்கையை வளர்த்து நாசம் செய்யும் வாக்குதிறுயாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றனர்.

**கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு எதிரான இன்றைய சவால்கள்**

விசுவாசம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் உயிர்நாடி; கிறிஸ்தவ வாழ்வோ இவ்விசுவாசத்தின் வெளியடையாளமாகும். ஆனால் இன்று பல கிறிஸ்தவர்களை நோக்குகின்ற போது, நம்பிக்கைதான் வாழ்வு என்று சொல்லிக் கொண்டாலும் நினைத்த காலத்திற்குள் நினைத்ததை சாதிக்க முடியாவிட்டால் அலுத்துக்கொள்கின்றார்கள். சஞ்சலப்படு கின்றார்கள். இதனால் கடவுள்தான் என் எல்லாம் என்று கங்கணம் கட்டியவர்கள் துன்பம் வந்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதகம், குறி, மை, என்று அலைகின்றார்கள். இன்னும் சிலர் கடவுளுக்கே உரிய முக்கியத்துவத்தை பல்வேறு பொருட்களுக்கும், செயல்பாடுகளுக்கும் கொடுக்கின்றனர். திருப்பலிகளுக்கும், வழிபாடுகளுக்கும் ஏதோ கடமைக்காக செல்கின்றார்களே தவிர உண்மையான பயபக்தியுடன் இறைவனை வழிபட வேண்டும் என்ற வாஞ்சையுடன் செல்வதில்லை. இதனால் திருப்பலியில் கூட தாங்கள் செய்யவேண்டிய உலக கடமைகளைப் பற்றி சிந்திக்கின்றனர்.

மேலும் இன்றைய சமுதாயத்தில் விசுவாசம் தளர்ந்ததினால் சமூக கட்டுப்பாடுகள், சட்டங்கள் சம்பிரதாயங்கள் மீறுவது எல்லாம் ஒரு நாகரீகமாக தோற்றம் அளிக்கின்றன. இதைத்தான் இன்றைய சினிமாவும் கற்பித்து நிற்கின்றது. 'விளையாட்டு Rule நீ மீறாட்டி foul எல்லைகள் தாண்டு அதுதாண்டா Rule' என்கிறது ஒரு சினிமா பாடல். இதனால் இன்று சட்டங்களையும், கட்டுப்பாடுகளை பாதுகாத்து அதற்கு ஏற்ப வாழ்வது என்பது மிகவும் அலட்சியமான ஒரு செயலாக கருதப்படுகின்றது. இதனால் தான்தோன்றித்தனமான வாழ்வு, எப்படியும் வாழலாம் என்ற நிலை மேலோங்கி இருப்பதால் கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு எதிரான நடவடிக்கைகள் சாதாரணமாகி விட்டன. தான் செய்த பிழைகளை நியாயப்படுத்த முயல்வதும், பிழைகளை சுட்டிக் காட்டுபவர்களை நகைத்து வசைகூறி இழிவுபடுத்துவதும் நாகரீகமாகிவிட்டது.

இன்றைய நுகர்வுக் கலாச்சார உலகத்தில் நிரந்தரமற்றவைகள் நிரந்தரம் போல தோற்றமளிக்கின்றன. இதனால் பலர் சொத்துக்களை, பதவிகளை, அதிகாரங்களை தம்மகத்தே குவிப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர், இவை அனைத்தும் கானல் நீர் போன்றவை என்பது பலருக்கு புரிவதில்லை. இதனால் தங்களது முழு நேரத்தையும், சக்தியையும், பலத்தையும் இவற்றை அடைவதற்கு செலவழிக்கின் றார்களே தவிர நிலையான, உண்மையான இறைவனில் நம்பிக்கை கொண்டு அவர்வழி செல்ல முயல்வதில்லை.

உலகத்தை திரும்பி பார்த்தோம் என்றால் நாடுகளுக்கிடையில், நகரங்களுக்கிடையில், வீடுகளுக்கிடையில், உறவுகளுக்கிடையில் ஏன் சகோதரர்களுக்கிடையிலும் நம்பிக்கை அற்ற தன்மைகள். இதனால் போட்டி, சச்சரவு, பொறாமை, பிணக்குகள் என்பன மலிவு விலையில் கிடைக்கும் சரக்குகள் போல் ஆகிவிட்டன.

### மனித கேள்விகளும் நம்பிக்கை ஆண்டும்

இவ்வாறான சூழலில் நம்பிக்கை என்பது என்ன? எதை நம்புவது? எது உண்மை? எது போலி? என்ற குழப்பநிலை எம் அனைவர் மனதிலும் எழுகின்ற சவாலான வினாக்களாக இருக்கின்றன. ஆகவே உண்மையான நம்பிக்கை என்றால் என்ன? அதை வளர்ப்பது எப்படி? என்பதை தெளிவுபடுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளதை உணர்ந்த எம் முன்னைய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் நம்பிக்கை ஆண்டின் அவசியத்தை உணர்ந்து அதை எமக்கு பரிசாக தந்திருப்பதும், நம்பிக்கை ஆண்டு பற்றிய சிறப்பான ஒரு சுற்றுமடலை வெளியிட்டிருப்பதும், இறைவனுடைய அருளும், பரிசுத்த ஆவியின் வழிநடத்தலும் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் ஊடாக இன்றும் எமக்கு கிடைக்கின்றது என்பதன் இன்னுமொரு எடுத்துக்காட்டு ஆகும்.

ஒன்பதில் ஏமாந்து ஒன்றை சந்தேகிக்கும் இன்றைய உலக சூழலில் நம்பிக்கை வாழ்வை அமைக்க எமக்கு அழைப்பு விடுவிக்கின்றது நம் அன்னையாம் திருச்சபை. இந்த அன்பின் அழைப்பை நாம் அவசியம் ஏற்க வேண்டும். ஏனெனில் நாம் வாழும் சூழலில் நம்பிக்கை வாழ்வு என்பது அத்தியாவசியமாக உள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**நம்பிக்கை என்றால் ...**

நம்பிக்கை வாழ்வை வாழ வேண்டும் என்றால் நம்பிக்கை என்றால் என்ன என்பதை நன்கு அறிவது அவசியமாகும். நம்பிக்கை என்பது கடவுளின் சுய வெளிப்படுத்தலுக்கும் அவரது மாபெரும் வல்ல செயலுக்கும் மனிதன் கூறும் பதில்மொழி அதாவது கடவுளின் வெளிப்பாடாகிய இயேசுவை அறிந்து, அவரைத் தேடிச் சென்று, அவரிடம் எம் வேண்டுதல்களை சமர்ப்பித்து, அவர் சொல்வதைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, அதை நம் வாழ்வாக்குவதாகும், அன்று 'வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர்' என ஆபிரகாம் கருதி வாழ்ந்தார். இதனால் விசுவாசத்தின் தந்தையானார் அவ்வாறே இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவிலும் அவர் கொண்டு வந்த இறையரசிலும் நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இதைத்தான் எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர், "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை" (எபி11:1) என்று கூறுகின்றார்.

**நம்பிக்கை ஆண்டின் அவசியம்**

- கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கை என்பது இன்றியமையாததாக உள்ளது. ஆனால் பலர் இன்றைய சமூக, கலாச்சார, அரசியல் விளைவுகளைப் பற்றி அதிகம் கவலை கொள்வதால் நம்பிக்கையில் சிக்கல் ஏற்படுகிறது. இவ்வாறான சூழலில் நம்பிக்கை பற்றிய சிந்தனைகளை மேலும் உருவாக்க அதை செயல்படுத்த நம்பிக்கை ஆண்டு எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

- திருச்சபை ஒவ்வொரு கிறிஸ்தவரையும் உலகத்தின் ஒளியாக, உப்பாக வாழ அழைக்கின்றது. ஆனால் பலர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட விசுவாசத்தையும், நம்பிக்கையையும் மூடி மறைத்து சாட்சிய வாழ்வு வாழாது உள்ளனர். ஆகவே நம்பிக்கை ஆண்டின் மூலம் திருச்சபை உலகத்தின் ஒளியாக, சாரமுள்ள உப்பாக வாழ ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.

- இன்று பலர் உலக மாயக் கவர்ச்சிக்குள் சிக்குண்டு எது சரி எது தவறு எனத் தெரியாது தள்ளாடுகின்றனர். யேசுவுக்கு செவிமடுத்த மக்கள் கேட்டதுபோல, "எங்கள் செயல்கள், கடவுளுக்கு உகந்தவாறு இருக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்" (யோவா6:27) எனக் கேட்கின்றனர். இவ்வாறு கேட்பவர்களுக்கு இயேசுவின் பதிலை எடுத்துரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது "கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கு ஏற்ற செயல்" (யோவா 6:29) வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டது.

திருச்சபை நம்பிக்கை ஆண்டைக் கொண்டாட அழைப்பது இது முதல் தடவை அல்ல. ஏற்கனவே 1967ம் ஆண்டை அன்றைய பாப்பரசர் 6ம் சின்னப்பர் நம்பிக்கை ஆண்டாக அறிவித்திருந்தார். இது தூய பேதுரு, தூய பவுல் ஆகியோரின் சாட்சிய வாழ்வின் (ஏறக்குறைய கி.பி67) 19ம் நூற்றாண்டை கொண்டாடுவதற்கும், 2ம் வத்திக்கான் சங்க படிப்பினைகளை அனைவரும் அறிந்து, வாசித்து நடைமுறைப்படுத்தவும் உதவியாக இருக்கும் என்று ஏற்படுத்தப்பட்டது. இதனால் திருச்சபையில் ஏற்பட்ட புத்துணர்ச்சியும், புதுப்பித்தலும் மீண்டும் ஏற்படும் என்ற நோக்கிலேயே மீண்டும் ஒரு நம்பிக்கை ஆண்டு நமக்கு தரப்பட்டுள்ளது.

**நம்பிக்கையின் சாட்சிகளிடம் இருந்து கற்றுக்கொண்டது**

வேதாகம காலம் முதல் இன்றுவரை நம்பிக்கை வாழ்வுக்கு சான்று பகர்ந்து நமக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்தவர்கள் பலர். "யாரிடம் செல்வோம் இறைவா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன."(யோவா6:68) என்று இயேசுவின் மீது பற்றுறுதியை அறிக்கையிட்ட தூய பேதுரு; "எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தை பிடித்துக்கொள்வோம்." (எபே6:16) என்று கூறி யேசுவின் மேல் உள்ள நம்பிக்கையால் எட்டுத் திக்கும் சென்று நற்செய்திக்கு சான்று பகர்ந்த தூய பவுல், "உலகம் முழுவதும் தனதாக்கி கொண்டாலும் தன் ஆன்மாவையே இழப்பாரெனில் அவருக்கு வரும் பயன் என்ன?" (மத் 16:26) என்ற இறைவார்த்தை மூலம் தூண்டப்பெற்று இயேசுவின் மீது உள்ள நம்பிக்கையால் அனைத்தையும் துறந்து மிகப்பெரிய மறைபரப்பாளராகிய தூய பிரான்சிஸ்கு சவேரியார், இவ்வாறு ஒவ்வொரு மறைசாட்சியும், தூயவரும் நம்பிக்கையின் சாட்சியாக, நம் நம்பிக்கை வாழ்வுக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்து சென்றுள்ளனர். மேலும் தன் வாழ்வை நம்பிக்கைத் தடத்தில் பதித்து, "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக் 1:45) என்று எலிசபேத்தால் போற்றப்பட்டு, நம்பிக்கையின் விருட்சமாக நம்பிக்கை வாழ்வுக்கு நற்சான்றாக விளங்கும் தூய மரியாள் நம் அனைவருக்கும் சிறந்த முன்மாதிரிகையாக உள்ளார். இவர்களின் முன்மாதிரிகை நம்பிக்கையாண்டில் நம் அனைவருக்கும் திசைகாட்டிபோல உள்ளது.

**நம்பிக்கை ஆண்டின் முக்கிய நோக்கங்கள்**

1. 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்க மறைக்கல்வி ஏடுகள் என்பன இன்றும் அதன் பிரகாசத்தையும், மதிப்பையும் இழக்கவில்லை என்பதை புரிந்துகொள்ள
2. அவை சரியாக வாசிக்கப்படவும், அதன்மூலம் அதை பிரதிபலிக்கவும் சந்தர்ப்பம் வழங்க
3. 2ம் வத்திக்கான் சங்கமானது 20ம் நூற்றாண்டில் திருச்சபை மீது பொழியப்பட்ட அருள் என சுட்டிக்காட்டி விளக்கிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள் புதிய (21ம்) நூற்றாண்டில் திருச்சபையை வழிநடத்தும் திசைகாட்டியாகவும் புதுப்பிக்கும் சக்தியாகவும் இருக்கும் என்பதை புலப்படுத்த

**புதுப்பிக்கும் சக்தியாக திருச்சபை**

திருச்சபையின் புதுப்பித்தல் விசுவாசிகளின் வாழ்வினால் சாத்தியமாகின்றது. இறைமகன் இயேசு விட்டுச்சென்ற வார்த்தைகளை வாழ்ந்து ஒளிர்வதன் வழியாக, உலகின் துன்பங்களினூடே இறைவனின் ஆற்றலால் முன்னேறிச் செல்வதன் வழியாக, திருச்சபைக்கு உள்ளும் புறமும் இருந்து வரும் இன்னல்களை பொறுமையுடனும் அன்புடனும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலால் எதிர்கொள்வதன் வழியாக, சிந்தனை, உணர்வுகள், மனநிலை, செயற்பாடுகள் தூய்மைப்படுத்தப்பட்டு மாற்றம் அடைவதன் வழியாக, இறை அன்பின் வழியாய் செயற்படும் நம்பிக்கை மானிடத்தை மாற்றும் அடிப்படைச் சக்தியாய் அமைவதன் வழியாக திருச்சபை புதுப்பிக்கும் சக்தியாக உலகில் திகழ்கின்றது.

**நம்பிக்கை வாழ்வா? போதனையா?**

இன்று மக்கள் போதனையை விட வாழ்க்கையையே உற்று நோக்குகின்றார்கள். யார் யார் இந்த நம்பிக்கையை தங்கள் வாழ்வில் அனுபவித்து, அவ் அனுபவத்தை வெளிப்படுத்துகின்றார்களோ, யார், யார் இந்த நம்பிக்கை வாழ்வை சுவைத்து தங்கள் வாழ்வை நடத்துகின்றார்களோ அவர்களது சாட்சிய வாழ்வே குன்றின்மீது ஏற்றிய தீபம் போல அனைவருக்கும் ஒளி கொடுக்கும். ஆகவே நம்பிக்கையை வெறுமனே எம் போதனையில் மட்டும் வெளிப்படுத்தாமல் எம் செயல்களிலும் வெளிப்படுத்த நம்பிக்கை ஆண்டு எம்மை அழைக்கின்றது. தூய யாக்கோபு கூறுவது போல "தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன?" (யாக் 2:14), "உயிர் இல்லாத உடல்போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்தது" (யாக் 2:26) போலாகிவிடும். ஆகவே தனிமையில் ஒதுக்கப்பட்டு, ஓரம்கட்டப்பட்டு, நம்பிக்கையிழந்து இருப்போருக்கு குரல்கொடுக்க, நம்பிக்கையை அளிக்க அவர்களோடு எம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் இந்த நம்பிக்கை ஆண்டிலே கிறிஸ்துவோடு உள்ள உறவை அதிகப்படுத்தி, ஆன்மீக மீட்பை பெற முயல்வோம்.

***முடிவாக***

திருமுழுக்கின் வழியாக நம்பிக்கை எனும் விதை கொடுக்கப்பட்டுள்ளது. அவ் விதைக்கு இறைவார்த்தை, நற்கருணை எனும் பசளைகளை தூவி, பச்சாதாபம் எனும் அருட்சாதனம் மூலம் களைகளை அகற்றி, செபம், தியானம், ஒறுத்தல் போன்ற சூரிய ஒளி, நீர், காற்று என்பனவற்றை கிடைக்க செய்வதன் மூலம் விதையை வளர செய்வோம். இயேசுவின் மீது முதல் நம்பிக்கை வைத்து, அவரை அறிந்து, அன்பு செய்து அனுபவிப்போம். நாம் பெற்ற அனுபவத்தை மற்றவர்களுக்கும் அறிவித்து அனைவரையும் நம்பிக்கை வாழ்வில் இணைத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை உயர்ந்த முத்து உங்களுக்கு
# உங்களுக்கு வேண்டுமா [மத் 14:46]

அருட்சகோதரி P.குளோறியா
சலேசியன் சபை

நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும். (யோவா15:12)

வாழ்வு என்பது அன்பு செய்வது
அன்பு காட்டுவது பரிவு
பரிவு காட்டுவது உற்சாகம்
உற்சாகத்தில் ஊற்றெடுக்கும் படைப்பாற்றல்
எல்லாம் அன்பே

இறைவன் நம்மீது கொண்ட அன்பை முதலில் நாம் ஆழமாக உணர்ந்தால் தானே, பிறரை அன்பு செய்ய முடியும். இந்த அன்பை எவ்வாறு உணர்வது!

நம் இளைப்பாறிய திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் நம் உள்ளத்தின் ஆன்மீக தாகத்தை உணர்ந்தவராய் அருமையான பதில் கொடுக்கிறார்.

என் அன்பு பிள்ளைகளே! நீங்கள் இயேசுவின் அன்பை ஆழமாக உணர வேண்டுமா! இதோ விலைமதிக்க முடியாத ஒரு முத்தை (மத்14:46) உங்களுக்குக் கொடுக்கின்றேன். அதுதான் மறைக்கல்வி .

மறைக்கல்வி ஒரு சாதாரண புத்தகமல்ல. மாறாக

விலைமதிக்கமுடியாத முத்து. ஏனென்றால்

புதிய வாழ்வு நம்முள் மலர. புனித பாதைக்கு அழைத்துச் செல்கின்றது.

இத்தகைய புதிய வாழ்வைப் பெற வேண்டுமானால், மறைக்கல்வி மீது தணியாத தாகம் கொள்ள வேண்டும். நமது நேரத்தை இதைப் படிப்பதற்காக தியாகம் செய்ய வேண்டும். அமைதியான சூழலில் சிந்தனையை ஒருமுகப்படுத்திப் படிக்க வேண்டும்.

நண்பர்களோடு குழுவாக இணைந்து படிப்பதன் மூலமாகவும் மறைக்ல்வியின் ஆழமானப் பொருளை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

படிப்பதன் மூலம் பெற்ற அறிவையும், அனுபவத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பகிர்தல் என்றால் நாம் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கை விசுவாசத்தைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரோடு ஒருவர் பேசி மகிழ்தல் ஆகும். பகிர்தலுக்கு முன் என் விசுவாசம் எப்படிப்பட்டது என்பதை புரிதல் அவசியம்.

சிறந்த இசை வல்லுனருக்குத் தெரியும்
தான் எந்த ராகத்தில் வாசிக்கிறோம் என்று,
சிறந்த சிற்பிக்குத் தெரியும்
தான் எப்படிப்பட்ட சிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்று, அதுபோல எமது விசுவாச நிலையை அறிய வேண்டும்.

நமது விசுவாசம் நம் பெற்றோர், மூதாதையர் தந்த இறை விசுவாசத்தோடு மட்டும் அந்த விசுவாசத்தை நாம் நமதாக்கிக் கொள்ள வேண்டும். நமது நம்பிக்கை வாழ்வு சற்று ஆழப்பட்டதாக வாழ்க்கையில் எதிர்வரும் சவால்கள், சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் மன உறுதியோடு எதிர் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். எவ்வாறெனில்,

சூரிய ஒளி பட்டவுடன் காய்ந்து போகும் பனித்துளி போல அல்லாது எச்சூழலிலும் அசைக்க முடியாத, ஆழமான விசுவாசம் கொண்ட யோபுவைப் போல இருக்க வேண்டும்.
“ஆண்டவர் தந்தார், ஆண்டவர் எடுத்துக் கொண்டார்;
ஆண்டவர் பெயர் போற்றப்பெறுக.” (யோபு2:21)
திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் யோபுவைப் போல அசைக்க முடியாத விசுவாசத்தையும், இறைவனின் அரவணைப்பையும் நிறைவாய் பெற்ற கடவுளின் அன்பு பிள்ளைகள், அவர் அன்பை பறைசாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் அல்லவா?
“நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும்
என் சீடராக்குங்கள்.” (மத்28:19)
என்று இயேசு கூறுகின்றார்.
“விடாமுயற்சியோடும், ஆர்வமிக்க உள்ளத்தோடும்
ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள்” (உரோ12:11)
என்று புனித பவுலடிகளார் கூறுகின்றார்.
கடவுள் இஸ்ராயேல் மக்களை மீட்க எரேமியா இளைஞரைத் தேர்ந்தெடுத்தார். அவரோ!
“என் தலைவராகிய ஆண்டவரே
எனக்குப் பேசத் தெரியாதே
சிறுபிள்ளைதானே” (எரே1:6) என்றார்.
ஆனால் கடவுள்
“சிறுபிள்ளை நான் என்று சொல்லாதே
யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ, அவர்களிடம் செல்.
நான் உன்னோடு இருக்கிறேன்” (எரே1:7-8) என்றார்.
இனியவர்களே!
மக்கள் கிறிஸ்துவோடு உள்ள உறவில் வளரவும், சாட்சிய வாழ்வு வாழவும், சமூகப் பார்வை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று மனித நேய சமூகத்தைக் கட்டி எழுப்பவும் வேண்டுமென்பதே மறைக்கல்வியின் நோக்கம். "மறைக்கல்வி" என்ற விலை உயர்ந்த முத்தின் உன்னத உணர்வை புரிந்து கொண்ட நாம் நமது வாழ்க்கையை சற்று உள்நோக்குவோம். பிறரோடு பகிர்ந்து கொள்ள முன் வருவோம்.

சிந்தனைக்கு :

திருமுழுக்குப் பெற்ற நான் இறையாட்சிப் பணியின் நிமித்தம் இறையாட்சிப் பணியில் எனது பங்கை ஆற்ற தயாராக இருக்கின்றேனா?

நான் வாழும் குடும்பம், வழிபடும் ஆலயம், பணித்தளம், பாடசாலை, பொழுதுபோக்கு இடங்கள், மற்றும் எல்லா நேரங்களிலும் என் முன்மாதிரியான கிறிஸ்தவ வாழ்க்கையினால் பல ஆன்மாக்களை கவர்ந்து இயேசுவிடம் அழைத்து வருகின்றேனா?

எரேமியா இளைஞரை போல எனக்குப் பேசத் தெரியாதே சிறுபிள்ளைதானே, அதிகம் படிக்கவில்லையே, பிறர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என சாக்கு போக்குகள் கூறிக் கொண்டு கோழையாக வாழ்கின்றேனா?

இயேசுவின் நற்செய்தியை அனுபவித்து,அறிந்தவராகிய நான், என் வாழ்க்கை அனுபவங்களை, இறைவன் என் வாழ்வில் செய்த நன்மைத்தனங்களை தேவை ஏற்படும்போது எல்லோர் முன்னிலையிலும் பகிரங்கமாக, சாட்சியம் கூற முன் வருகின்றேனா?

இறைவனின் வியத்தகு படைப்புக்களான இவ்வுலகம், படைப்பின் மணிமகுடமான மனிதர்கள், ஆண்டவரின் பராமரிப்புத்தன்மை அனைத்தையும் விசுவசிக்கும் நான் விவிலியத்தை தினந்தோறும் வாசிக்கின்றேனா?

எச்சூழலிலும் கிறிஸ்தவ சமயத்தைப்பற்றிய பிற இனத்தவரின், மதத்தவரின், பிரிவினை சபையினரின் கேள்விகளுக்கு தயக்கம் இன்றி, விவிலிய குறிப்புக்களோடு பதில்மொழி கூற ஆயத்தமாக இருக்கின்றேனா?

அன்பு இளையோரே, பிள்ளைகளே, இறை குலமே!
இயேசுவின் மனநிலையை எல்லோரும் பெற்றிட
அதனால் மனித மாண்பு மலர்ந்திட
மறைக்கல்வியை வாழ்வாக்குவோம்
மனிதம் போற்றும் மறைக்கல்வி
இம்மண்ணில் புத்தெழுச்சியும், புதுப்பார்வையும் தந்திட
உலகில் அமைதியும், நீதியும், நிம்மதியும் நிலைக்க
வாழ்ந்திடுவோம் இன்னொரு இயேசுவாய்,
சான்று பகர்ந்திடுவோம் சாட்சிய வாழ்வினால்
புறப்படுவோம் புத்துயிர் பெற்றவர்களாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# பிற கிறிஸ்தவ சமய மக்களுடன் ஏற்படுத்தக் கூடிய விசுவாச அடிப்படையிலான ஒன்றினைப்பு முயற்சிகள்

அருட் சகோதரன் நி.பெய்லன் குரூஸ்

இன்றைய சமுதாயத்தில், பல்வேறு வகையான மாற்றங்கள் காலத்திற்கும் நேரத்திற்கும் தகுந்த வகையில் இடம் பெற்றுக்கொண்டிருக் கின்றன. ஆனாலும் மனிதன் தனது வாழ்வின் ஊற்றாகவும் உறைவிடமாகவும் இருக்கின்ற இறைவனில் கொண்டிருக்கின்ற விசுவாசம் தடம்புரளும் போது, அதை யாராலும் சாதாரண ஒரு நிகழ்வாக கணித்து விட முடியாது. அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில் பரம்பரை பரம்பரையாக கத்தோலிக்கர் களாக இருந்த விசுவாசிகள் கூட, பிற கிறிஸ்தவ சமயங்களில் இணைவதும் ஏனைய அடிப்படைவாத குழுக்களுடன் இணைவதும் மிகுந்த கவலையளிக் கிறது. ஆகவே இவ்வாறான நிலைக்கு என்ன காரணம், அதிலிருந்து மீண்டு ஒன்றிப்பு முயற்சிகளில் எவ்வாறு ஈடுபடலாம் என்று அருட்தந்தை J.A.E ஜெயசீலனுடன் மேற்கொண்ட சிறு செவ்வி வருமாறு...

❖ நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிலான முறையில் அடிப்படைவாத கிறிஸ்தவக் குழுக்கள் உருவாகி பெருகிக்கொண்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என நீங்கள் கருதுகின்றீர்கள்?

இன்றைய பின் நவீனத்துவத்தில் மனிதனதும் உலகினதும் போக்கு மிகவும் மோசமான முறையில் மாற்றமடைந்துகொண்டு செல்கின்றன. முன்னைய காலங்களில் கட்டுக்கோப்பினுள் வாழ்ந்த மனிதன் அதை உடைத்தெறிந்து தான் நினைத்த வகையில் வாழ தொடங்கிவிட்டான். ஆனாலும் உலகின் அதீத மாற்றங்களுக்குள் சிக்கிக்கொண்ட அவன் அவற்றால் வருகின்ற சவால்களுக்கு ஈடுகொடுக்க விழைந்தவர்களாக தங்களுக்குள்ளே குறுகியவர்களாக உருவாகும் இந்த அடிப்படைவாத குழுக்கள் வேதம் மாத்திரமே, அதுவும் நாங்கள் பறைசாற்றுவதே வெளிப்பாடு, இறைவனை நம்புபவர்களே ஈடேற்றப்படுவார்கள், இதோ கிறிஸ்து வருகின்றார் என்றெல்லாம் பறைசாற்றுகின்றார்கள். இச்சிறிய வட்டத்தினுள் வாழ முற்படுகின்றார்கள். தங்களுக்குள்ளே விசுவாசிகளை தீவிரமாக கவரத்தொடங்கி விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கத்தோலிக்கரும் கூட தங்களது பரவலாக்கத்தில் தளர்வடைந்துள்ளார்கள். தளத்திருச்சபையிலும் திருச்சபை அதிகாரிகள் மட்டிலும் குருக்கள் துறவிகள் மட்டிலும் இப்பரவலாக்கம் செயலிழந்து மிகவும் தளர்வடைந்துள்ளது. அவர்கள் காட்டும் முன்மாதிரிகை விசுவாசிகளை திருப்தியடைய செய்யவில்லை. அவர்களின் போதனை ஒன்றையும், வாழ்க்கை முறைமை பொருத்தமில்லா இன்னுமொன்றையும் காட்டுவது அவர்களை விசுவாச சத்தியத்தில் பின்தள்ளச்செய்கின்றது. மேலும் சாதாரண வாழ்வை வாழும் நடுத்தர கத்தோலிக்க விசுவாசிகள் திருச்சபையின் பங்குகள் மட்டில் உருவாக்கப்படும் கொடுப்பனவுகளை ஜீரணிக்க முடியாதவர்களாக மாறிவிட்டார்கள். இதனால் உண்மை கத்தோலிக்க கிறிஸ்தவர்களையும் தங்கள் நிலையிலிருந்து பின்னடையச்செய்கின்றார்கள். இதனால் அவர்கள் மிகைப்பட சிந்தனைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வாறு மிகைப்படுத்தப்பட்ட சிந்தனையின் வெளிப்பாடே அவர்களை கத்தோலிக்க திருமறையிலிருந்து மாறி அடிப்படைவாத குழுக்களை நோக்கிச் செல்லவைக்கின்றன.

இருப்பினும் அவர்கள் நிலமையும் நீடித்திருக்கக்கூடியது என கருதிவிட முடியாது. என்றாலும் அவர்கள் ஒரு கட்டுக்கோப்பினையும் வார்த்தையை பிட்கும் தன்மையையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சில வழிபாட்டு முறைகளையும் முன்வைக்கின்றார்கள். இத்தகைய முறைகளை எம்முடைய கத்தோலிக்க திருச்சபையினர் சிறப்பாக அருட்பணியாளர்கள் மேற்கொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றார்கள். பீடப்பணியாளர்கள், பாடகர்குழாம், மறையாசிரியர் போன்றோர்களுடன் அவர்கள் பணி நிறைவடைந்துவிடுகின்றது என நினைக்கின்றனர். முதிர்ச்சிபெறாத அவர்களின் பணியால் உரிய மறைவாழ்வின் சேவையை வழங்கமுடியாதவர்களாக உள்ளார்கள். ஆனால் இந்த அடிப்படைவாத குழுக்களோ மறைவாழ்வின் சேவையினை குறிப்பிடக்கூடிய அளவிலாவது வழங்குவதற்கு முன்வருகின்றார்கள். இன்னும் சிறப்பாக அடிமட்ட மக்களை அலசி ஆராய்ந்து அவர்களை கவரக்கூடியவாறு தங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். இவ்வாறு எம்மவரிடம் உள்ள எதிர்மறை கருத்துக்களாலேயே அவர்கள் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்துசென்று பிரிவினை சபையில் இணைகின்றார்கள். அவர்களும் விரைவாக முன்னேறுகின்றார்கள்.

"How I would love the church which is poor and for the poor?"

ஆனால் எம்முடைய மறைமாவட்டங்களைச் சற்று நோக்குகையில் அவை அனைத்தும் ஏழைகளையன்றி நடுத்தர வர்க்கமானவர்களைச் சார்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. உதாரணமாக யாழ்த் திருச்சபையைப் பொறுத்தமட்டில் அது ஏழைகளை மையப்படுத்தியதொன்றாக எனக்குத் தென்படவில்லை. ஆகவே "ளநசஎைஉந வழ வாந ிழழச" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் முன்வைக்கப்படும் சேவையை செயற்படுத்துவது இயலாத காரியமாக உள்ளது. ஆனால் அடிப்படைவாத குழுக்களோ எம்தேசம் முழுவதும் பரவலாகக் காணப்படும் சிறு சிறு ஏழைக் குடும்பங்களிடையே ஊடுருவி தங்களது பணிகளை ஓரளவு மேற்கொள்கின்றார்கள். ஏழைகளது ஆன்மீகவாழ்வை மட்டுமல்ல வாழ்வாதாரத்தையும் உயர்த்துவதற்கு முற்படுகின்றார்கள். அவர்களிடையேயும் பத்திலொன்றை கடவுளுக்குக் கொடுத்தல், வழிபாட்டுக் கூட்டங்களில் கட்டாயமாக பங்குகொள்ளவேண்டும் என பலவாறான நிபந்தனைகளும் காணப்படுகின்றன. இருப்பினும் கத்தோலிக்க மறையில் காணப்படும் உயர் சமூக அழுத்தங்கள் போன்றதல்ல. கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் வேரூன்றி உயிரூட்டம் பெறவேண்டும் என்றால் சிறு சிறு மட்டங்களில் காணப்படும் ஆத்மார்த்த தேவைகளை பூர்த்திசெய்து அவர்களின் விசுவாச வாழ்வை உண்மை அன்பு படிப்பினையிலும் பகிர்விலும் கட்டியெழுப்ப வேண்டும். அவர்களிடையே பணியாற்றும் அருட்பணியாளர்களது எடுத்துக்காட்டான செப வாழ்வும், முன்மாதிரிகையும் விசுவாசிகளுக்கு நம்பிக்கையை ஊட்டும் சக்தியாக அமைய வேண்டும்.

எம்முடைய வாழ்வில்தான் ஆன்மீகம் நிறைந்துள்ளது, நாம் காட்டுவதே உண்மைக்கிறிஸ்தவ வாழ்வு என்று யானைப்பார்க்கச் சென்ற குருடர்களின் கதையாக எம்முடைய ஆன்மீகமும் மறைவாழ்வும் மாறிவிடக்கூடாது. உண்மை இறைமகனாம் கிறிஸ்துவில் நம்பிக்கைக்கொண்டு அவர் காட்டும் இறையரசின் விழுமியங்களின் படி நடந்து கிறிஸ்துவில் இணைந்து வாழ்வோம்.

❖ கிறிஸ்தவ ஒன்றிப்பினை கட்டியெழுப்புவதற்கு பல சவால்கள் எழுகின்ற இக்கால கட்டத்தில் அதனை வளர்க்க எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளலாம்?

ஒரே கடவுளை இறைவனாக கொண்ட அனைத்து கிறிஸ்தவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் அதீத ஈடுபாட்டினை காட்ட வேண்டும். அவர்களுடை ஒவ்வொரு செயற்பாட்டையும் நாம் அறிந்து அவர்களுடன் கருத்துப்பகிர்வினை அடிக்கடி மேற்கொள்வதோடு அவர்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்து அவர்களது இன்ப துன்பங்கள், சண்டைச் சச்சரவுகள், சபைகளுக்கிடையே உருவாகும் பிரச்சனைகளை அறிந்து அவற்றை சுமூகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது சபைகளுக்கிடையே ஒன்றிப்பு மலர்வது சாத்தியமாகும். ஆனால் இவ்வொன்றிப்பை வளர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மிகவும் சொற்பமானவையே. வருடாந்தும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான வாரமாக அனுசரிக்கப்படும் ஒரு கிழமையில் எத்தகையதொரு பயன்பாடான ஒன்றிப்பு முயற்சியை மேற்கொள்ள முடியும்? எனவே எங்களுக்காக எங்களைவிட்டு வெளியே சென்று பணியாற்ற முனைய வேண்டும் இதனை எம்முடைய பாப்பரசரும் தன்னுடைய நாளாந்த மறையுரைகளில் கூறி வருகின்றார். அவ்வாறான செயற்பாடு எம்முடைய மறைமாவட்டத்தில் முடியாத காரியமாகவே உள்ளது. யதார்த்த நிலையினை உணர்ந்தவர்களாக ஒன்றிப்பிற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளும் போது ஒன்றிப்பு மலர்வது வெள்ளிடைமலை.

❖இந்த நம்பிக்கை ஆண்டில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறான முறையில் எமது நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்?

ஒரே வார்த்தையில் கூறுவதென்றால் "இறைவார்த்தையிலேயே" எம்முடைய வாழ்வை கட்டியெழுப்பமுடியும். அப்பொழுது நம்பிக்கையும் கட்டியெழுப்பப்படும் எம்முடைய நாளாந்த வழிபாடுகளில் மட்டும் எம்முடைய நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியாது மாறாக வழிபாடுகள் பிரதிபலித்து நிற்கும் இறைவார்த்தையை எம்முடைய வாழ்வாக்க வேண்டும். இதனால்தான் விவிலிய ஆண்டு என 2011ம் ஆண்டினை எமது ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் பிரகடனம் செய்து *"ஏநசடிரஅ னுழஅinை"* எனும் சுற்றுமடலை எழுதி விசுவாசிகளுக்கு வழங்கினார். அர்த்தங்கள் மறைந்துபோகும் இன்றைய வழிபாடுகளில், உயிரூட்டத்தை அளித்து வெளிவேடம் தவிர்த்து வாழ அழைத்து நிற்கின்றார். மேலும் இன்றைய குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி அவர்களின் குடும்பத்தில் ஆழ ஊடுருவி அன்பு பணியாற்ற அருட்பணியாளர்களை அழைத்து நிற்கின்றார். இளைஞர்களை மறையறிவில் வலுப்படுத்த வேண்டும், பொருளற்றதாக மாறிவிட்ட அன்பியங்கள் பொருட்செறிவு உடையதாக மாற்றம்பெற வேண்டும். இதற்கு பங்கின் அருட்பணியாளரின் சேவை முக்கியமாக தேவைப்படுகின்றது. ஆன்பியங்களை தரிசித்து இறைவார்த்தையை விசுவாசிகள் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் அதனை உடைத்துக்கொடுப்பவர்களாக இருக்கவேண்டும். அவ்வார்த்தையை வாழ்வாக்கி மக்களுக்கு உதாரணப்புருசர்களாக திகழ வேண்டும். மிகக்குறைந்த பலனில் மகிழ்ச்சி கொள்ளாது நிறைந்த பலன்கொடுக்கக் கூடிய வகையில் அவர்கள் தன்னலம் அற்ற பணியாறறுபவர்களாக அவர்கள் மாற்றம் பெற உழைக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு பின்னரான விசுவாச வாழ்வு

அருட் சகோதரன் இ.அன்ரனி சோசை
இறையியல் 4ம் வருடம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



“நமது கலாச்சார சூழ்நிலையில் நம்பிக்கையின் கொடை இல்லா விட்டாலும், பலர் தங்களின் வாழ்வின், உலகின் இறுதி அர்த்தத்தை, உண்மையை நேர்மனத்தோடு தேடிக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த தேடல் இம்மக்களை கடவுள் எனும் மறைபொருளுக்கு இட்டுச் செல்லும் பாதைக்கு கொணர்வதால், இறை நம்பிக்கையின் முன்னுரை (Preample) எனக் கொள்ளலாம்.” (நம்பிக்கையின் வாயில் 9)

சத்தமும், சந்தடியும் நிறைந்த உலகம், அமைதி அபூர்வமாகி விட்டது. சத்தம் நாகரிகமாகவும், அமைதி அநாகரிகமாகவும் மாறிக் கொண்டு வருகிறது. ஊமைகளால் கூட உண்மைகளை எடுத்துரைக்க முடியும் என்ற உண்மையை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. மனச்சாட்சிக்கு கல்லறை கட்டி விட்டு உணர்ச்சிக்கும் உணர்வுக்கும், பணத்துக்கும் பதவிக்கும் கட்டுப்பட்டுவிட்டது. இன்று காடுகள் இருந்த இடத்தில் வீடுகள், மேலும் உரிமைகளுக்கு, உண்மைக்கு குரல் கொடுப்பவர்களுக்கு கிடைப்பது சாவுமணி எனும் மகுடம். இளையோர் மத்தியில் செல்வாக்கு பெறும் வீடியோக் கலாச்சாரம், இணையக் காட்சியறை கலாச்சாரம், சினிமா நட்சத்திரங்களின் நடத்தைக் கோலங்களை கண்டு பாவிக்கும் போக்கு, மத அடிப்படை வாத குழுக்களின் அதிகரிப்பு, மக்கள் நேர்சீரற்ற உளப்பாங்குகளையும், விழுமியங்களையும் கொண்டவர்களாக மாறும் போக்கு, பிறமதங்களின் வழிபாடுகளை அவதூறுபடுத்துதல், அற்ப சலூகைகளைக் காட்டி மதமாற்றம் செய்தல் போன்ற செயற்பாடுகள், வறுமை காரணமாக இளம் பெண்களில் பலர் வசப்படுத்தப்பட்டு கர்ப்பிணிகள் ஆக்கப்படுதல், சமூக சீர்குலைவுகள், கருக்கலைப்பு, தற்கொலை முயற்சிகள், நடத்தைக் கோல பிறழ்வுகள் போன்ற பின்னிப் பிணைந்த சமுதாய வலைப் பின்னலிலே காலத்தை நகர்த்தி கொண்டிருக்கின்றோம் நாம்.

அன்று இஸ்ராயேல் மக்களுடைய பாலைவன அனுபவத்தை ஒத்ததுவே எமது மக்களின் வாழ்வும், பல்வேறு விதமான அடிமை, சிறைவாழ்வுளை தம்மோடு இணைத்து தமது (விசுவாச) ஒரே இறைக்கொள்கை என்ற சத்தியத்திலே காலத்துக்கு காலம் உடைவுபட்டு இறைவனது தண்டனையை பெற்று ஈற்றிலே ஒரே இனமாக ஒரே இறைக் கொள்கையை பின்பற்றுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களாக உருபெற்றனர் இஸ்ராயேல் இனம். நானூறு ஆண்டுகள் அடிமைத் தனத்தை அனுபவித்தும், உணவுக்கு பஞ்சம், நீருக்கு பஞ்சம், மீண்டும் 38வருட குறிக்கோள் இல்லாத நாடோடி வாழ்க்கை (Kadesh Barnea). இதைவிட தம்மை அடிமைதனத்திலிருந்து விடுவித்த இறை வனின் நன்றியை நினையாது பலதடவை களில் அவருக்கு எதிராக முறையிட்டனர். இவ்வாறான துன்பங்களை அனுபவித்த இஸ்ராயேல் இனம் வாக்களிக்கப்பட்ட இடத்தை அடைவதற்கு முன்னரும், தெரிந்து கொள்ளப்பட்ட இனமாக அழைக்கப்பட்டு இறை உறவிற்கு, ஒரே இறைக் கொள்கைக்கு பிரமாணிக்கமாக தமது வாழ்க்கையினை வாழ்ந்தனர்.

பல்வேறு விதமான துன்பவியல் அனுபவங்களுக்குள் அகப்பட்டு, ஏக்கங்களும், உயிரிழப்புகளும், உடமை, உரிமை இழப்புகளும், கவலைகளும் வாட்டிய வேளைகளி லெல்லாம் ஏன் இறைவா இவ் வாழ்க்கை? என கேள்விக்கணைகளை தொடுத்து இறைவன் மீது ஆண்டாண்டு காலமாக வைத்திருந்த விசுவாசத்தை கைவிட்டு இறைபற்றில்லாத குடும்பமாக பலர் வலம் வந்தாலும், அக் கல்வாரி அனுபவங்களை சுகமான சுமைகளாக சுமந்து உயிர்ப்பிலே மகிமைகொண்ட வெற்றி வீரன் யேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றிய குடும்பங்களும் இருப்பது கண்கூடு. இறைவனின் நெறிமுறைகளுக்கு மதிப்பளிக்காமல், இறைவன் இல்லாத உலகைக்கட்டி எழுப்பி அதில் தான் மகிழ்ந்து இருக்க முயல்கிறது மனித சமூகம். வாழ்வு, மகிழ்வு இவற்றின் ஊற்று இறைவனே. ஊற்று இன்றி எவ்வாறு நீரோடை இருக்கும்? இறைவன் இன்றி நிலைத்த மகிழ்ச்சியும், நிலையான வாழ்வும் கற்பனைக்கே உரியவை. இன்றைய சமுதாய வாழ்விலும், தனி மனித வாழ்விலும் நம்பிக்கையைத் தளர்த்தும் நிகழ்வுகளும் காரணிகளும் பல உண்டு. அதே வேளை காலத்துக்கு காலம் அல்லது கணத்துக்குக் கணம் உருவாகி கொண்டே இருக்கின்றன. அவற்றில் சில

1. ஆர்வம் குன்றிப் பேசும் போக்கு
2. கடவுளைப் பேரம் பேசும் போக்கு
3. கடவுள் தேவையில்லை என்றபோக்கு
4. தொடர்பில்லாத கிறிஸ்தவ நம்பிக்கை
5. தனி மனித வாழ்வின் போராட்டம்
6. கணணி இணையத் தள உலக சவால்கள்
7. எதுவும் பாவமில்லை என்ற மனப்பாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வம் குன்றிப் போதல் :–

தொடக்கத்தில் ஈடுபாட்டோடும், ஆர்வத்தோடும் செயல்ப்பட்ட பலர் காலம் செல்லச் செல்ல ஆர்வம் குன்றி போவதும், நம்பிக்கை வாழ்வில் மிகப்பெரும் தளர்ச்சி காண்பதையும் அறியக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக மறைக்கல்வி கற்றுக் கொடுக்கும் ஆர்வமுள்ள பங்கு பணியாளர், தான் சென்றவுடன் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மறைக்கல்வி கற்றுக்கொடுத்து, நல்ல நம்பிக்கையுடைய மாணவர்களையும், குடும்பங்களையும் உருவாக்க வேண்டும் என்று நினைக்கின்றார். ஆனால் அவருக்கு போதுமான ஒத்துழைப்புமில்லை, மக்களுக்கு இதில் ஆர்வமுமில்லை. இதனால் திட்டமிட்ட பணிகள் எதனையும் அவரால் செயல்ப்படுத்த முடிவதில்லை. இது அப்பணியாளரின் தொடர்த் தோல்வி என்றால் தன் பணி வாழ்வில் தொய்வு ஏற்படுவதோடு அவரின் தனி வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நம்பிக்கை குறைவு ஏற்பட்டு ஆர்வம் குன்றி போய்விடுகின்ற நிலைப்பாடு உருவாகிக் கொண்டிருக்கின்றது.

கடவுளைப் பேரம் பேசும் போக்கு :–

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் பலர் கடவுளை பேரம் பேசி மசிய வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதைக் காண்கின்றோம். அதாவது கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் வெறும் பக்தர்களாகவே திகழ்கின்றனர். கடவுளை வியாபாரியாக கருதி பேரம் பேசுகின்றனர். என்னுடைய மகனுக்கு, மகளுக்கு இதை இதைச் செய்தால் நான் இப்படி இப்படிச் செய்வேன். உண்மையான பக்தனாக வாழ்வேன் என்ற வாக்குறுதி.

கடவுள் தேவையில்லை என்ற போக்கு :–

அறிவியலும், கணணியும், இணையத் தளமும் உலகைத் தலைகீழாக மாற்றியுள்ளன. படித்து வசதியுடன் வாழ்வோர் பலர், ‘கடவுளே தேவையில்லை’ என்ற மனப்போக்கில் வளர்ந்து வருகின்றனர். தங்களின் தேவையை நிறைவேற்றப் போதுமான வசதி கொண்ட நடுத்தரத் தையும் தாண்டிய பல குடும்பங்கள் கடவுள் என்பவர் வாழ்வுக்கு தேவையற்றவர் என்ற மனநிலையில் வாழ்கின்றனர்.

நம்பிக்கை வாழ்வில் தெளிவின்மை

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களாகவும், திருவிழாக் கிறிஸ்தவர்களாகவுமே வாழ்கின்றனர். இவர்கள் சிறு பருவத்திலிருந்து கற்றுக்கொண்ட செபங்களுக்குரிய விளக்கமோ, தாங்கள் கொண்டுள்ள கிறிஸ்தவ நம்பிக்கைப் பற்றிய தெளிவே இல்லாமல் வாழ்பவர்கள்.

தொடர்பில்லாத கிறிஸ்தவ நம்பிக்கை :–

கிறிஸ்தவம் மனித மாண்பையும் இறைவனின் இயல்பையும் உயர்வாகப் போற்றி அதனை பரப்பிக் கொண்டு வருகின்றது. எனினும் விவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு என்பவற்றில் கற்றுக் கொடுக்கப்பட்டவையும், கற்றுக் கொண்டவையும் இன்று வாழ்வோடு தொடர்பற்றதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் போக்கு அதிகரித்து வருகின்றது. வழிபாடு என்பது சடங்கு என்ற நிலையும், மறைக்கல்வி வகுப்பறை பாடம் என்ற போக்கும் வளர்வதால் வாழ்வோடு தொடர்பற்ற கிறிஸ்தவர்கள் பலர் உருவாகி வருகின்றனர். கிறிஸ்தவ வாழ்வுக்குரியவற்றை, கற்று தருபவற்றை வாழ்க்கையோடு இணைத்து பார்க்கும் பக்குவம் குறைந்து வருகின்றது.

பிரச்சினைகள் இல்லாத வாழ்வு என்பதைக் கனவில் கூட எண்ணிப் பார்ப்பது கடினம். கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வு துன்பங்களினூடாக பயணிக்கும் போது தான் மகிமை அடைய முடியும் என்பது எமது தலைமைக் குருவினதும், எமது விசுவாசத்திற்கு சான்று பகர்ந்த முன்னோர்களினதும் சான்றாகும். இதைவிட வேதாகமத்தில் கூட ஆபிரகாம், மோசே, தூய பவுல், அன்னை மரியாள் போன்றோரின் வாழ்வுகூட எமக்கு முன் உதாரணங்களாக கோடிட்டு காட்டப்பட கூடியவை. இறைமகன் கிறிஸ்து அன்றைய கால சமுதாய, சமூக, அரசியல் பின்னணியிலே மாற்று மதிப்பீடுகளையும், மாற்று வாழ்க்கை முறையையும், மாற்று உறவு முறையையும், மாற்று எதிர்கால இலட்சிய வாழ்வையும் இறையாட்சி எனும் சமுதாய வாழ்க்கை முறை வழியாக கற்று தந்தார். இன்றைய சமகால சூழமைவில் கூட கிறிஸ்தவ நம்பிக்கைத் தளர்ச்சிக்கான காரணிகளை திறந்த மனநிலையோடும், நேர்மறையான எண்ணத்துடனும் எதிர் கொண்டால் இயேசு விரும்பிய இறையாட்சியை இகமதில் கட்டி எழுப்ப முடியும் என்பதில் ஐயமேதுமில்லை. இதை தான் நம்பிக்கையின் வாயில் எனும் எமது பாப்பிறையின் விசுவாச ஆண்டின் திருத்தூது மடல் எண் 9 விளக்கி நிற்கின்றது. கால நீரோட்டத்திற்கு ஏற்ப எமது சமுதாயமும், கலாசாரமும் மாற்றமடைந்து நம்பிக்கையின் கொடை இல்லாது போனாலும் இருளின் வலைக்குள் மூழ்கினாலும் உண்மையான மனச்சான்றுக்கு ஏற்றபடி தமது வாழ்வின் இறுதி இலக்காகிய இறைவனை அடைவதை முழு மூச்சாக கொண்டு தமது வாழ்வினை நகர்த்துகின்றபோது அது இ.றை நம்பிக்கையின் முதல் படி அல்லது முன்னுரை என்று கூறலாம் என்கிறார்.

ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்வு இயேசுக் கிறிஸ்துவின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையை உயிர் மூச்சாக கொண்டு கிறிஸ்துவை தவிர வேறு எவரையும் தெய்வமாக கொள்வதில்லை என்ற கோட்பாட்டுக்கு உயிர் வடிவம் கொடுத்தது. கிறிஸ்துவின்மேல் அவர்கள் வைத்த நம்பிக்கை அவர்களுக்கு கொடுத்த பரிசு துன்பம், கொடுமை, சிறை, இறுதியாக சாவு.

துன்பங்கள், வேதனைகள், இழப்புக்கள் தான் எமது முயற்சியின் விளைவுகளாக நாம் அடைந்தாலும், நம்பிக்கை ஆண்டினில் பயணிக்கிற நாம் திருச்சிலுவையின்மகத்துவத்தை மகுடமாக தரித்து, இறைமகன் கிறிஸ்துவில் தளராத விசுவாசம் கொண்டு வாழ்வோம். இறையரசின் விழுமியங்களையும், இறையரசினையும் எம் சூழமைவில் அமைத்திட அயராது உழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை இருபத்து மூன்றாம் அருளப்பர் - (Pope John XXIII)

R.O. றெரன்ஸ்



இருபத்து மூன்றாம் யோவான் அல்லது இருபத்து மூன்றாம் அருளப்பர் (Pope John XXIII) கத்தோலிக்க திருச்சபையின் 261 ஆம் திருத்தந்தையாக 1958-1963 காலகட்டத்தில் ஆட்சி செய்தார். இவர் 1881 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் இத்தாலி நாட்டைச் சேர்ந்த லொம்பார்டி (Lombardy) மாநிலத்தில் பெர்கமோ (Bergamo) என்னும் பகுதியைச் சேர்ந்த சோத்தோ இல் மோந்தே (Sotto il Monte) என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் ஆஞ்செலோ ஜீசேப்பே ரொங்கால்லி (Angelo Giuseppe Roncalli) என்பதாகும். அவருடைய தந்தை ஜோவான்னி பத்தீஸ்தா ரொங்கால்லி (Giovanni Battista Poncalli), தாயார் மரியன்னா ஜீலியா (Marianna Giulia).அவர்களுக்குப் பிறந்த பதின்மூன்று குழந்தைகளுள் ஆஞ்செலோ ஜீசேப்பே ரொங்கால்லி நான்காமவர். இவர் ஒரு வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் பிறந்த ஊரிலிருந்த பெரும்பான்மையான மக்களைப் போலவே அவரது குடும்பத்தினரும் குத்தகை நிலத்தில் வேலை செய்தனர்.

கிறிஸ்தவ பாதிரியார் அருளாளர் பிரான்சிஸ்கோ ரெபுஜினா இவருக்கு கிறிஸ்தவ வாழ்விற்கான பயிற்சிகளை அளித்தார். குடும்பத்தின் இறை வாழ்வும், பாதிரியாரின் அறிவுப் புகட்டல்களும் இவரை சிறுவயது முதலே கிறிஸ்தவ நெறி தழுவிய அற்புத இளைஞனாக உருவெடுக்கச் செய்தது. 1892ம் ஆண்டில் இவர் தனது பதினோராவது வயதில் ரோமன் கத்தோலிக்க குருமார்கள் பயிற்சி பெறக்கூடிய பெர்கமோ (Bergamo) சிறு குருமடத்தில் கல்வி பயின்றார். இங்குதான் இவர் ஆன்மீக சம்பந்தமான குறிப்புக்கள் எடுக்கும் பழக்கத்தை தொடங்கினார். பின்னர் இவர் இந்தப் பழக்கத்தைத் தனது வாழ்நாள் முழுவதும் தயாரித்து வைத்திருந்த இறைநெறிக் குறிப்புக்கள் யாவும் ஓர் ஆத்மா (A Soul) என்னும் சஞ்சிகையில் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் உரோமையில் புனித அப்போல்லினார் குருமடத்தில் (இன்றைய "உரோமைத் திருத்தந்தை பெரிய குருமடம்") கல்வி கற்றார். இறையியல் படிப்பை முடித்து, 1904ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி குருப்பட்டம் பெற்றார். உரோமை நகரில் உள்ள "மோந்தே சாந்தோ அன்னை மரியா" கோவிலில் குருப்பட்டம் நிகழ்ந்தது.

இவர் சிறுவயதிலிருந்தே அன்னை மரியா மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். மிலான் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இம்பெர்காகோ என்னும் ஊரில்அமைந்திருந்த அன்னை மரியா திருத்தலத்திற்கு அவர் பலமுறை திருப்பயணமாகச் சென்றுவந்தார்.

பெர்கமோ மறைமாவட்டத்தின் ஆயர் ஜாக்கொமோ ரீதினி - தெதேஸ்கி, (Giacomo Radini Tedeschi) என்பவர் தம் செயலராக இவரை 1905இல் நியமித்தார். அப்பணியை மிக்க விசுவாசத்தோடும் திறமையோடும் ஆற்றினார். 1914ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி ஆயர் ரீதினி தெதேஸ்கி இறந்தார். அதுவரையிலும் இவர் தம் ஆயரின் செயலராகப் பணிபுரிந்தார். அதே சமயம் பெர்கமோ குருமடத்தில் திருச்சபை வரலாறு கற்பித்தார்.

முதலாம் உலகப்போர் தொடங்கியபோது இவர் இத்தாலிய இராணுவத்தின் சுகாதாரப் பிரிவில் பணியாற்றினார். அவருக்கு இராணுவ ஆன்ம ஆலோசகர் என்னும் பதவியும் வழங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு திருத்தந்தை பதினைந்தாம் பெனடிக்ற் இவருக்கு மொன்சிஞ்ஞோர் பட்டம் கொடுத்து, அவரை இத்தாலியின் நற்செய்தி அறிவிப்புப் பணி தேசிய அமைப்புக்கு தலைவராக நியமித்தார்.

போர் முடிந்த பின்பு இளைஞர்களின் இறையியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மாணவர் இல்லம் ஒன்றினைத் தொடங்கினார். இதற்குப் பின்பும் இறையியல் வழியில் பல்கேரியா மற்றும் துருக்கியில் பல பொறுப்பான பதவிகளை வகித்த ஆஞ்செலோ ஆயராக 1925ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார். 1953ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி கர்தினாலாக உயர்த்தப்பட்டார்.

திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் ஆண்டகையின் மறைவிற்குப் பின், 1958ம் ஆண்டு அக்டோபர் 28ம் திகதி ஆஞ்செலோ திருத்தந்தையாக பணியில் அமர்ந்தார். நான்கு ஆண்டுகளும் ஏழு மாதங்களும் மட்டுமே இவர் திருத்தந்தையாக வீற்றிருந்த போதிலும் உலகம் முழுவதும் இவரை மனித நேயம் மிக்கவர், எளிமையானவர், தைரியமானவர், சுறுசுறுப்பானவர் என்று போற்றும் படியாக இருந்தது இவரது செயற்பாடுகள். இதில் முக்கியமானது இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை (1962 - 1965) கூட்டியது. இதன் மூலம் பல்வேறுபட்ட மாற்றங்கள் கத்தோலிக்க திருச்சபையில் நிகழ்ந்தது. உதாரணமாக திருவழிபாட்டை மாற்றியமைத்ததைக் குறிப்பிடலாம். ஆனால் அச்சங்கம் நிறைவேறுவதற்கு முன்னரே, 1963ம் ஆண்டு யூன் மாதம் 3ம் திகதி இறந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை இருபத்து மூன்றாம் யோவானுக்கு 2000ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 3ம் திகதி முத்திப்பேறு பட்டம் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## Year of Faith and our Catechesis.

( A multifarious perspective)

At the very outset the article starts with the explanation of the symbol for the year of faith. Then the invitation extended by the year of faith is explained. Through faith we experience Jesus. It is through catechesis viz. the kerygma of the early church that we practise our faith and grow towards maturity. This year the 50th year of Vat.II and the 20th year of the publication of the Catechism of the Catholic Church (CCC) merge together. We are in need of substantial reasons to understand the above two realities.

Then the subject of catechism is analyzed. The real Catechism paves the way for the understanding of the meanings of the prayers we recite and gives the experiential explanations for the creed we uphold. For this it is the Word of God which is the source of our Christian life that should be the underlying factor and foundation. Six reasons are enumerated to substantiate this. It is the Word of God that opened the eyes of the disciples on the way to Emmaus as they walked and talked to Jesus and set their hearts on fire. Catechesis is essentially a journey towards discipleship. Such a catechesis is a sine qua non for every Christian. It should enable every Christian to grow in the personal relationship with Christ and bear witness to the faith we profess.

Catechesis i.e. the kerygma has undergone radical transformation in recent times. The importance of family catechesis is stressed and recommended to be fostered. The way for catechesis is the way of faith. It is this catechesis that will give us the courage and strength for our Christian commitment in the socio-economic-politico-religious & cultural milieu. Then the functions of catechesis are enumerated. In fine the heavy responsibility that the clergy should shoulder is emphasized.

*Rev. Fr. M. Regis Rajanayagam.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mary example of our Faith

Faith is one of the theological virtues. But in the rapid changing world, the faith of Christians is more and more weakened and questioned. But the church continues to strengthen and encourage us in our faith. And in a special way this year is being declared as the year of faith, so as to deepen our faith in Jesus Christ.

For us Christians our mother Mary takes a prominent place in our life. She by her words and deeds lived her faith and becomes an example and a model to follow. She is the first believer. It is clearly found in the Gospels that her greatness consists not in her exceptional wisdom or knowledge or talents, but in her faith. She fully believed God and completely surrendered herself to his will and she was blessed by God abundantly.

Mary's faith was an act of submission and obedience, and an act of complete trust, great simplicity and purity. Mary's whole heart is filled by the word of God and that echoed in her ears. Her whole mission has been one of faithful to that word of God. The great privilege which Mary enjoyed as the Mother of God, does not make her an exception to the basic law which all Christians are subjected. She became mature in her faith by personal contact with God.

Faith is indeed a gift of God. But its fruitfulness depends on sort of person who receives it – Faith grows and flourishes in well disposed souls. Mary's heart was a well prepared ground for her faith to grow. since we have been called and chosen by Jesus to be his disciples, our faith must really and truly unite us with Christ and others. For that our faith must be strengthened by prayer and practice of charity.

So following Mary, whose whole life was a clear example for the faith, let us try to inculcate the good virtues found in Mary, and search for God through Mary.

*Bro. A. Jude Carowf OMI*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The challenges in the life of Faith and the way to overcome them

The disciples having filled with the Holy Spirit proclaimed, "you crucified and killed by the hands of those outside the law, but God raised him up having freed him from death."(Act 2; 23 – 24) This was the first faith proclamation of the early church. There were many who proclaimed that Jesus is the Lord and followed the foot –prints of Jesus and enjoy a place in the company of the saints. The challenges they faced in their life of faith and the way they overcome them is really a lesson for us today.

The bible contains the accounts of challenges and troubles faced by the people of Israel in their life of faith as well as how they overcame them. So basing on the biblical account this essay argues the challenges in the life of faith today and the way to overcome them.

Today the fundamentalists challenge the Catholics for their image worship. This is an important challenge and to face this challenge we should have a correct understanding of image worship. We have many references in the OT in support of this image worship such as Ex 25: 10 -22, Heb 9:5 where god asked the people of Israel to make an ark of covenant. The Israelite took the ark wherever they went and they fell on their faces.

The council of Nicaea in 787A.D declared that the veneration of saints is not an idol worship but a pious action. The second Vatican council also permits the people to have the sacred image in the churches in a moderate way.

Today in this modern world we see this idol worship in many forms e.g. Equating man to that of God, giving prime importance to the wealth, "their good is the belly, and their glory is in their shame" (Phi 3: 19) giving into worldly pleasure. Another important form of idol worship is television and telephone, these are existing social evil which bring disturbance in the family as well as in the society. Then the workaholics who give prime impotance to works and give less importance to the Lord's Day and days of obligation. The Prevailing cast system, discriminating people on the basis of caste is also a modern form of idol worship. All these are challenges to the life of faith.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Another important challenge we face today is the distinction between politics and religion. The idea that let the politicians mind their own business and the spiritual leaders perform the functions due to them is the prevailing idea of the people today. Politics is not something reserved only to a group of people. Today the situation demands all, especially the catholic ministers, to engage themselves in politics (of cause not party politics) so that the ordinary people be liberated from the ruthless and unjust politician and social structure.

Today the people have lots of problem, physical sickness, psychological sickness, no peace of mind etc. so to gain peace of mind and to liberate themselves from all these problems they do pious devotions such as devotion to our Lady, devotion to divine Mercy, devotion to saints & they make pilgrimages etc. at last when they don't get the expected liberation or peace of mind they are discouraged. At this time the fundamentalist come and take away their souls. Therefore this is a big challenge today. Pious devotions are good but we should have correct understanding of them all.

The Catholic Church has faced numerous challenges, hardships, persecution, schism etc. in the past and still it faces many challenges at present such as abortion, mercy killings, homosexual marriages, using contraceptive methods etc. but the church from time immemorial opposes all these evil practices which really are stumbling blocks to the Christian faith.

So the church invites us to live the Christian faith faithfully, taking our forefathers, Blessed Mother and the Saints as solid examples.

*Rev. Fr. Douglas Milton Logu*

# Our Faith should be ...

We are living in the world of advertisement and consumerism where people are often nonplused as to how to cope up with this situation. Many are trying to come up in their life by stepping on others' shoulders; many wear masks on their faces and cheat others, as a result the ordinary people lose their property, and mentally undergo so much of pain.

Today many Christians speak about faith but they fail to practise it. As a result when the problems come they search for illegal means and unwanted



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

practices. There is no true piety in their worship, and they pray for the sake of obligations and to satisfy their worldly affairs. Breaking the rules becomes the fashion, consumerism becomes their worship, and unfaithfulness becomes their day-to-day practice. Amidst all these calamities and problems, calling for a year of Faith by our former pope Benedict XVI shows the guidance of the Holy Spirit through the church leaders.

Faith means man's answer to God's revelation. That means believing and obeying Christ who is the highest revelation of God. Every Christian is called to live as the salt and light of the world. The Year of faith is another invitation to this call. It is the paramount important duty of the church to teach 'what is good and evil' to the people who are fascinated with materialism. Every Christian is expected to grow the seed of faith, which they receive in their baptism, through the nourishment of the Word of God and the Eucharist.

When we turn the pages of history there were many personalities who witnessed to the life of faith especially St. Peter, St. Paul, and St. Francis Xavier were some of them. We are called to follow their foot prints.

The year of Faith is the call and opportunity to renew and rekindle our faith. The church has put forward this call in this year as it remembers the 50th Anniversary of the inauguration of Vat-II and the completion of 20 years of publication of the Catechism of the Catholic Church (CCC). The Vatican documents and the CCC have not lost their brightness and dignity in this modern world to give a chance to the people to read these documents frequently; and show that the Vatican documents are God's grace in the 20th century and a guiding force even in the 21st century.

The Church has the prime duty to renew itself in order to illumine in the world. Today the urgent need is for a witnessing life than eloquent sermons or preaching. "Faith by itself, if it has no works, is dead." (Jam 2:17) So through our action let us light a spark in the life of the people who are marginalized, desparate, separated from others and suffering in loneliness.

*Bro. P. C. Thayalan Coonghe*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Life of Faith in the aftermath of the war

Today we are living in a noisy world. Everywhere, we here noises, commotion and uproarings . The controversies are considered or rather justified as right and moral. There is no respect for the voice of conscience, people tend to lead a life that is hedonistic. Truth is claimed to be more relative and the objective realities are intentionally neglected. There are false ideologies emerging and misleading the people.

The people of Israel went through the same experience as of today. They were under slavery and were liberated. On their way to the promised land again they were tested; they at times questioned God and even went behind man- made gods. They were unfaithful to the covenantal relationship with God. However, they were loved by God and consequently God reconciled them with him by the instrumentality of prophets and kings.

Even today we are in the same situation, having lost everything: properties, wealth, health lives, we questioned God: why have you forsaken us? But still God loves us, we cannot go away from God. The life without God is empty and futile. God is the source and summit of our life. Even though we are tested we must positively approach God's temptations, they are the moulding instruments of our lives.

Today we lose hope frequently, attempt to deal business with God and lead an atheistic life, we struggle in our families, societies, etc. the paramount importance we give to the computers and not to our spirituality. We have lost the sense of sin. The biblical personalities and our ancestors too witness for the blessing of God through sufferings. But our endeavours travel just in the opposite direction. We create a value system for our life. Even though we are struggling in the gloomy nights of the materialistic movements of this world we cannot deviate from the voice of conscience.

The life of the early Christians centered around the risen Christ experience. It is this experience that stimulated their faith in God. Therefore let us not get into the movements that encourage the practical atheism. Instead we shall grow in faith and hope for the life of eternity.

*Bro. I. Antony Sosai*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Families are the foundation for the life of Faith

Pope Emeritus Benedict XVI has declared the year of faith on 11th of October 2012 up to 24th of Nov.2013 as the commemoration of 50 years of anniversary of Vat II council and 20 years of remembrance of CCC (Catechism of the Catholic Church). The Holy Father requested all the faithful to follow the year of faith and to conduct programmes and events, which may be related to promote faith aspects.

It is to say that the family plays an important role in the Catholic Church. The basic faith of a person is being rooted and grows day by day in a family. Besides all the faith renewing activities, that take place in the diocese, the family must sow the seed of faith in the children. When a child is born in a family, the parents are more responsible to administer the sacraments in their appropriate ages with correct time. The children must be taught the basic doctrine of faith with sufficient knowledge. The parents must be more conscious in sending their children for the catechism, Eucharistic celebration and other activities which are organized by their own catholic churches in their territory. The children must be taught to give due respect to the Holy Eucharist as the source and summit of our Christian life.

The parents and children are obliged to say the family rosary, and read the Word of God everyday. Hence the children must be encouraged in personal prayers, sacrificial life, visiting of the Blessed Sacrament and in practicing more important Christian virtues.

Today we live in the push button age where the situation becomes worse and dangerous. There is a tendency to lean against the Christian virtues. The children are more caring about worldly affairs. Amidst this situation, there is a question how the present children can build up the faith of the Catholic Church in the future. Besides their education, the children must be given a good knowledge of faith by their parents both natural and god parents as well.

*Miss. S. N. Florence*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Do you want a precious pearl?

Unless we feel profoundly the love of God, we cannot love others. How to feel this love of God? Our pope Emeritus Benedict XVI foresees the spiritual; urgency of our hearts and give answer; "My dear children, do you want to experience God's love deep within, I will give you a pearl of great value "CATECHISM". Catechism is not a simple book, but it is a precious pearl, because it helps us to bloom a new life within and leads us to the holiness. If we want a new life in Christ, we have to long and should study with real interest in the Catechism of the Catholic Church. For this, we need to sacrifice our time in order to learn Church Catechism, about the way of Christian life. We can also read it with our friends in group, so that we can understand by sharing with others. While sharing mutually, we express our knowledge and experiences with others and it may enrich everyone. We, as Christians need to talk and share about our faith in God and Christ with one another.

We should know about the Christian faith and Christian way of life to become what we desire and wish. We need to be deeply rooted in the faith of our ancestors, parents and make it our own, so that we can face the challenges, temptations and sufferings of present time with strong faith in God.

Our faith should not be like a few drop of water that dry soon by Sun light, it should be like the faith of Job who said, "God gave, God has taken away; blessed be His name." (Job 1:21) we the baptized are God's loving children and we receive His immense love and grace from the very time of Baptism. Therefore we are called to proclaim our faith and His love to the whole world as Jesus said; "Go, therefore, and make disciples from all nations" . When the people of Israel was abandoned their God, He called the young man Jeremiah to proclaim His message of consolation. The young man Jeremiah refused to accept and said; "Ah, Lord God! Behold I do not know how to speak for I am only youth.": but God strengthened him saying; "Do not say I am only a youth; for to all to whom I send you should go, for I will be with you to protect you". Like this way today catechism of the Church, invites us to live in love and share the love of God with others, bearing witness to Christian faith and to create a new humanity. We Christians have this pearl within us, we received this precious pearl. Therefore, it is our mission and lie to come forward to share with others.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Youth! Loving Children of God, all to get the heart of Jesus and the people to receive the new life, let us make Catechism our own, the people to praise catechism and this earth to get a new sight and enthusiasm, and this world to enjoy Peace, Justice and Love. Let us become another Jesus Christ in our society and share His love and faith by our witnessing life and set out to proclaim with new energy.

*Rev. Sr. Gloria (Salesian)*

# Efforts towards Ecumenism

The massive progress and the development of modern technology has stimulated man to come out of the well disciplined life with certain principles and regulations. Because of this man is in need of fulfilling his various needs and wishes, further he wills that everything should be done according to his likings. At this juncture, at present man is gifted with lots of options, and the freewill also helps him to choose what is good and suitable for him.

So when we come to our belief and religion, the similar situation remains there too. The very pathetic situation of the Roman Catholic Church is that many of the traditional Christians are trying to look for some options to chose sects and settle in, when they are faced with some problems in their former religion. It is really unjust if we are going to blame only the faithful for their sudden conversion to different sects and even to non catholic churches. If we go deeper, we will find out that as leaders of the Catholic Church many of our spiritual leaders are not performing their mission through word and deed sufficiently. Many times our spiritual leaders restrict their services within the regular church goers and they are not free enough to reach the poor, abandoned, sick, orphaned, needy, etc. This is also one of the main reasons for the traditional Catholics to leave the Catholic Church and to join some other sects and other non catholic churches.

Hence, the leaders of different sects and other Christian churches pay much attention to the basic needs of the people. Our Holy Father Pope Francis also stresses his views on the importance of the option for the poor. So therefore fulfilling the basic needs of the faithful and rendering sufficient



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

service with concern and love have become much more important than our rituals and celebrations.

Hence, not only the spiritual leaders of the catholic church but also the devoted believers too should take initiative and come forward to attend to the needs of each and everyone in their society. All should come out of their selfish lifespan and spend their rest of the lives for the unity among all the churches. To achieve the above unity and peace, our life should be built on the word of God, when we put the foundation very strongly and firmly then all the other necessary elements towards unity will be built up properly and orderly.

*Bro. N. M. Beyilan Croos*

# Blessed Pope John XXIII

Angelo Giuseppe Roncalli was born in sotto il Mont, a small country village in the Bergamo province of the Lombardy region of Italy. He was the first - born son of Giovanni Battista Roncalli and his wife Marianna Giulia Mazzolla and fourth in a family of 13. His family worked as share croppers. He was still a descendant of an Italian noble family, from a secondary and impoverished branch.

In 1904, Rancalli was ordained a priest in the catholic church of Santa maria in Monte Santo in Rome. In 1905, Giacomo Radini - Tedeschi appointed Roncalli as his secretary. Rancalli worked for Rodini Tedeschi until the bishop's death in 1914. During this period Roncalli war also a lecturer in the diocesan seminary in Bergamo.

During world war I Rancalli was drafted into the Royal Italian Army as a sergeant, serving in the medical corps as a stretcher - bearer and as a chaplain.After being discharged from the army in 1919, he was named spiritual director of the seminary. In 1921, Pope Benedict of the Society for the Propagation of the Faith.

He chose as his episcopal motto obedientia at pax (obedience and Peace),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which became his guiding motto. In 1953, he was appointed Patriarch of Venice and accordingly, raised to the rank of Cardinal Priest of Santa Prisca by Pope Pius XII.

Following the death of Pope Pius XII 1958, Rancalli was elected Pope, to his great surprise. He had even arrived in the Vatican with a return train ticket to Venice. John XXIII's personal warmth, good humour and Kindness entirely captured the world's affections. Pope John XXIII's coronation was on 4 November 1958. John called an ecumenical council fewer than ninety years after the first Vatican Counicil. From the Second vatican Council came changes that reshaped the face of Catholicism a comprehensively revised liturgy, a stronger emphasis on ecumenism and a new approach to the world.

The Paper died due to a perforated stomach cancer on 3 June at the age of 81, ending a reign of four years, seven months. He was buried on 6th June.

He was known affection ately as "Good Pope John" and the most beloved Pope in history" to many people. On 3 September 2000 John was declared "Blessed" by Pope John Paul II.

*R.O Terence*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா நாயகன்

இவ்வாண்டிலே தமது குருத்துவ பணிவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் எம் குருமடத்தின் உபஅதிபர் அருட்தந்தை P.J. ஜெபரெட்ணம் அடிகளாருக்கு இறையியல் கோலங்கள் தனது இனிய வெள்ளிவிழா வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றது.



இறைவனின் இனிய பூங்காவில்
அழகுறு நல் மலராய்
ஐ ஐந்து ஆண்டுகள்
வாடாத நற்செடியாய்
இறைமணம் வீசிடும்
இனிய நற்குருவே!
திருவழிபாட்டை சீருடன் ஆற்றிடும்
உன்னத குருவே!
இறைவனின் இரக்கத்தை
இரங்கினோர்க்கு கொடுத்திடும்
ஆன்மீக மருத்துவனே!
நாளைய குருத்துவ தூண்களை
செதுக்கிடும் கவிநூறு சிற்பியே!
மெய்யியல் இறையியலை
மொழியாற்றலும் கலந்து
கலையுடன் நீர் தந்தீர்!
ஏழைகளின் சிரிப்பிலே இன்புறும்
எளிய தொண்டனே!
அழைத்தவன் கரம்பற்றி
கலப்பையில் கண்பதித்து
ஆயுள் உள்ள காலமெல்லாம்
இறை ஒளியினில் இணைந்து சுடர்வீச
இதயத்தால் வாழ்த்துகின்றோம்...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 120/=

வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16

Euro 14

தனிப்பிரதி 55/=



தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2482, 021 222 7145



## IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly

Annual Subscription: Local (Incl. postage) Rs. 120/=

Foreign (Incl. postage) U.S.$ 16

Euro 14

Single Copy Rs. 55/=



Correspondence to:

**Irai Iyal Kolangal**

St.Francis Xavier's Seminary

Columbuthurai, Jaffna,

Sri Lanka.

Tel: 021 222 2482, 021 222 7145



Registered No. QD/160/News/2013

Design & Print Judson



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org